விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 02 புதன்கிழமை (16.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

## வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ஜே.வி.பி. தீர்வைப் பெற்றுக் கொடுக்கும்

### சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கக் கட்சி என்ற ரீதியில் ஜே.வி.பி. அனைத்துத் தலையீடுகளையும் மேற்கொள்ளும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவி துவாரகா இராசையாவின் உறவினர்கள் மற்றும் கல்மடு கிராம மக்களைச் சந்திப்பதற்காக சோமவன்ச உள்ளிட்ட ஜே.வி.பியின் தலைவர்கள் நேற்று முன்தினம் அங்கு சென்றிருந்தனர்.

தமது குடும்பங்களில் தலா ஒருவர் காணாமல் போயோ அல்லது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டோ இருப்பதாகக் கிராமவாசிகள் (18 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய கூட்டத்தில் சரத் பங்கேற்க முடியாது!

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கென்யாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இலங்கையின் எதிர்க்கட்சிகள் சார்பில் தடுப்பில் உள்ள முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவைக் கலந்து கொள்ள அனுமதிக்க முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்ற அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் நாடாளுமன்றம் சரத் பொன்சேகா, இந்த மாநாட்டில் பங்கேற்கும் வகையில் பரிந்துரைகளை மேற்கொண்டிருந்தது. இதனை (18 ஆம் பக்கம் பார்க்க)


# யுத்தக் குற்ற விசாரணை தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டில் இலங்கை

## ஐ.நா. பிரதிநிதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் சட்டவிரோதப் படுகொலைகள் தொடர்பான விசேட பிரதிநிதி பிலிப்ஸ் அல்ஸ்டன் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணை இலங்கையில் நடத்தப்படக் கூடாது எனவும் பாலஸ்தீன நிவாரணக் கப்பல்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

(18 ஆம் பக்கம் பார்க்க)



## பாம்பு கடித்து சிப்பாய் மரணம்

(யாழ்ப்பாணம்)

பாம்புக்கடிக்கு இலக்காகி உயிரிழந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பளை இராணுவ முகாமில் 6-வது படைப்பிரிவில் கடமையாற்றும் பதுளையைச் சேர்ந்த ரட்ணாயக்கா முதியான் கலாகே புஷ்ப குமார (வயது-35) என்பவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு அவரது சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-9)

## தாயும் மகனும் விபத்தில் பலி!

(வவுனியா)

ஏ-9 வீதியில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு முன்னால் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் தாயும் மகனும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த ரக் வண்டி மோதியதன் காரணமாகவே கொல்லப்பட்டுள்ளனர்.

இவ் விபத்தில் கொல்லப்பட்டவர்கள் 35 வயதான சிவநேசன் பிரேமளாதேவி மற்றும் அவரின் மகனான 7 வயதான சஞ்சயன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது (18 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பசியில் அரசாங்கம் வயிற்றுப் பசியில் பொதுமக்கள்

### சுட்டிக்காட்டுகிறார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அதிகாரப் பசியினால் அரசாங்கமும் வயிற்றுப் பசியினால் மக்களும் வாடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் சட்ட மாஅதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, சட்ட மாஅதிபரின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டமை சட்டவிரோதமானது.

அரசியல் சாசனத் திருத்தங்களை மேற்கொள்ளும் குழுவில் சட்ட மாஅதிபரும் அங்கம் வகிக்க வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் சாசனத் திருத்தப் பரிந்துரைகள் மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் (18 ஆம் பக்கம் பார்க்க)



## பராக் ஒபாமாவின் விசேட பிரதிநிதி ஜனாதிபதி மகிந்தவுடன் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் விசேட பிரதிநிதி சமந்தா பவார், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது யுத்தத்தின் பின்னரான இலங்கை நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமந்தா பவார் தேசிய பாதுகாப்புப் பேரவையின் மனித உரிமை மற்றும் பல்விவகாரப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டீனாஸ், அமெரிக்கப் பாதுகாப்புப் பேரவையின் யுத்தக் குற்றப் பிரதிநிதி டேவிற் பிரஸ்மா (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் அறிவுறுத்தலுக்கமைவாக யாழ். கல்வி வலய சமூகம் முன்னெடுக்கும் 'சிரமதானம் செய்வோம்; டெங்கை ஒழிப்போம்' செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக யாழ்.கல்வி வலய வளாகத்தில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது. இதில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதை படங்களில் காணலாம்.

# பிச்சைக்காரரை கொலை செய்துவிட்டு அவர் வைத்திருந்த பணம் அபகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெருவில் பிச்சைக்காரர் ஒருவர் கல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கொம்பனித் தெருவில் உள்ள முத்தையா வீதியில் வைத்தே அவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது. இனந் தெரியாத நபர் அல்லது திட்டமிட்ட குழுவொன்று பிச்சைக்காரரிடம் இருந்த பணத்தை அபகரிப்பதற்காக இந்த கொலையை செய்திருக்கலாம் என பொலிஸார் கூறியுள்ளனர்.

கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்திலும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றதுடன் அதன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதே போன்று நேற்று இடம் பெற்ற கொலையுடன் மேற்படி சந்தேக நபருடன் தொடர்புடைய குழுவுக்கு சம் பந்தம் இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச-5)

# உப தொழில் அலுவலகம் மீண்டும் கிளிநொச்சியில்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உப தொழில் அலுவலகம் மீண்டும் இன்று தொடக்கம் இயங்கவுள்ளதாக யாழ்ப்பாணம் உதவி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.யாழ்ப்பாண மாவட்ட தொழில் அலுவலகத்தின் கீழ் இயங்கிய கிளிநொச்சி மாவட்ட உப தொழில் அலுவலகம் யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெற்ற இடம்பெயர்வின் பின்னர் கடந்தஒருவருடமாகஇயங்கவில்லை.

தற்போது கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகத்தில் தற்காலிகமாக இன்று தொடக்கம் செயற்படவுள்ளது என்பதை தனியார்துறை தொழில்தருநர்களுக்கும் ஊழியர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதுடன் கிளிநொச்சி மாவட்ட தொழில் தருநர்களும் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களும் தங்களது தேவையினை கிளிநொச்சி மாவட்ட உப தொழில் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பூர்த்தி செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என யாழ். உதவி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். (ச)


## மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா



வடமராட்சி அமைப்பாளர்
ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்

எமது வேண்டுதலுக்கு இணங்கி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி வலய அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்களின் முயற்சியால் கடந்த 30.05.2010-ம் திகதி கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது மண்டான் கிராமத்திற்கு வருகைதந்து கிராமத்தின் பொதுக்காணியை பார்வையிட்டு அதில் சந்தை கட்டுவதற்கும் நெசவுக் கட்டிடத்தைத் திருத்தி அமைப்பதற்கும் நிதி ஒதுக்கியமைக்கும் எமது கிராமத்தின் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு உறுதியளித்தமைக்கும் மற்றும் அந்நிகழ்வில் கலந்து கொண்ட வடமராட்சி பிரதேச செயலர் சத்தியசீலன், பிரதேச சபை செயலாளர் குலநாயகம், நெல்லியடி ஈ.பி.டி.பி. காரியாலய பொறுப்பாளர் செந்தில்நாதன்-முரளி ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மண்டான் கிராம அபிவிருத்திச் சங்கம்
மண்டான்

(C-434)


# கிளி.வலய ஆசிரியர்களுக்கு ஆனி மாதச் சம்பளம்

(கிளிநொச்சி)

இணைப்பு பெற்று யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிளிநொச்சி வலயத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கான ஆனி மாதச் சம்பளக் கொடுப்பனவுப் பட்டியலில் கையொப்பம் இடும் செயற்பாடு நாளை 17 ஆம் திகதியும் நாளை மறுதினம் 18 ஆம் திகதியும் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

சம்பளப்பட்டியலில் கையொப்பமிட வரும் போது ஆனி மாதத்துக்குரிய லீவு (B-100) விபரத்தினை கொண்டு வருமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். (ச)




## யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை

நூற்றாண்டு 1910-2010

## நூற்றாண்டு முத்திரை வெளியீடு





இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை
நாள் : 18.06.2010 வெள்ளிக்கிழமை
காலம் : மு.ப. 10.00 மணி

தலைமை : திருமதி சிவமலர் அனந்தசயனன்
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை

முதன்மை அதிதி : கௌரவ ஜீவன் குமாரணதுங்க பா.உ
(தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர்)

சிறப்பு அதிதிகள் : திரு.எம்.கே.பி.திசாநாயக்க
(தபால்மா அதிபர்)

திரு.ஜே.எம்.டி.என்.அஸ்நேசன்
(பணிப்பாளர், முத்திரைப் பணியகம், அஞ்சல் திணைக்களம்)

கௌரவ அதிதிகள் : பேராசிரியர் நா.சண்முகலிங்கன்
மகாஜனன் 1960-1972
(துணைவேந்தர்,யாழ் பல்கலைக்கழகம்)

வைத்தியகலாநிதி ச.சிறி பவானந்தராஜா
மகாஜனன் 1970-1980
(பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலை)

### அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பளை.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை.

(1691)


# மரண அறிவித்தல்

மண்ணில்
21
01
1976



விண்ணில்
13
06
2010

## திருமதி செல்வரதி அன்ரனி விஜயகுமார் (பபி)

மாதகலைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரதி அன்ரனி விஜயகுமார் (பபி) 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று நோர்வேயில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் அன்ரனி விஜயகுமாரின் (ரகு) அன்பு மனைவியும், றொசானா, றொசான் ஆகியோரின் பாசமிகு தாயாரும். மரியதாஸ் (கிளி) செல்வறாணியின் அன்புமகளும் யுவானி பிலிப்புப்பிள்ளை, பெர்ணபேற் அம்மாவின் அன்பு மருமகளும், அன்ரனி கொண்சால் (சந்திரன்) கனடா, அன்ரனி செல்வதாஸ் (சுமந்திரன்) லண்டன், காலஞ்சென்ற அன்ரனி டியூக் செல்வசுதாகரன்(வேவி சிங்கம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யோசேப், பிறேமா, ஜெகன், வாசிங்டன் பெனிக்னா (டயானா), டொறின் பிரபாகினி (உஷா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதித் திருப்பலி வியாழக்கிழமை (17.06.2010) மாலை 5 மணி அளவில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
அ.மரியதாஸ் (கிளி)
தந்தை
கனால் வீதி மாதகல்

தொலைபேசி இலக்கம் :-021 7901660

(1694)

# இன்று ஒரு தகவல்

## கலியுகம்

தந்தை , மகனைப் பார்த்து , "கடைக்குப் போய் பேப்பர் வாங்கிக் கொண்டு வா" என்று சொன்னார்.

"அதுக்கு வேற ஆளைப் பாருங்க" என்று சொல்லிவிட்டுப் போனான் மகன்.

"என்னங்க? உங்கள் பிள்ளை உங்களிடம் இப்படிச் சொல்லி விட்டுப் போகிறானே" என்று கேட்டார் ஒருத்தர்.

"அவனைச் சொல்லிக் குற்றமில்லை.கலி முத்திவிட்டது. அதுதான் அப்படிச் சொல்லி விட்டுப்போகிறான்" என்றார் தந்தை.

இந்த யுகங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியவில்லை.

இருந்தாலும் அதைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதில் தப்பில்லை.

இப்பொழுது வருடம், மாதம், வாரம், நாள் இப்படி இருக்கிறதல்லவா. அதேபோன்று யுகங்கள் நான்கு.

வருடம் , மாதம், திகதியை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனெனில் நாம் இருக்கும் போதே அவையெல்லாம் வந்து போகிறது.

யுகங்கள் அப்படியில்லை. போன வருடம் உன்னை பொள்ளாச்சியில் பார்த்தேன் என்று சொல்ல முடியும்.

போன யுகத்தில் உன்னை புதுக்கோட்டையில் பார்தேனே- என்று சொல்ல முடியுமா?

எந்தெந்த யுகங்கள் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பதற்கு "மேதா்திதி "என்பவர் தான் முதலில் விளக்கம் கொடுத்தார்.

அவருடைய கணிப்பின் படி,

கிருதயுகம் 4800 வருடங்கள்; திரேதாயுகம் 3600 வருடங்கள்; துவாபரயுகம் 2400 வருடங்கள்; கலியுகம் 1200 வருடங்கள்;

சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்த வேறு சிலர் வேறு மாதிரியாகவும் கணக்குச் சொல்கிறார்கள். அவர்களுடைய கணக்கின்படி வருடங்கள் 1000 , 2000 ,3000, 4000 என்று வருகின்றன.

அது எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும் சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் பரமஹம்ச ஸ்ரீ ராஜ நாராயண்ஷ்ட் சாஸ்திரி என்பவர் ஒரு நூலை எழுதினார்.

அவர் பல்வேறு ஆராய்சிகளெல்லாம் செய்து என்ன சொல்லியிருக்கிறார் என்றால்...

1943 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி கலியுகம் முடிந்து கிருதயுகம் பிறந்து விட்டது என்கிறார்.

பாகவத சுலோகப்படி (12,2,24) சூரியன், சந்திரன், குரு,பூச நட்சத்திரங்கள் எல்லாம் சமகாலத்தில் ஒரே இராசியில் பிரவேசிக்கும் போது அல்லது சந்திரன், சூரியன், குரு இந்த மூன்றும் பூச நட்சத்திரத்தில் ஒரே இராசியில் ஒரே நேரத்தில் சேரும் போது- காலியுகம் முடிந்து கிருதயுகம் ஆரம்பமாகும்.

அந்தப் பூரண யோகம் 1943 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி வந்துவிட்டது. அதுதான் இவர் சொல்லும் கணக்கு.

இருந்தாலும் கிருதயுகத்தின் முழுப்பலனும் கிடைப்பதற்கு 100 வருடங்கள் ஆகுமாம்.

கிருதயுகத்தில் மக்களுக்கு நோய் வராதாம். அவர்களுடைய கோரிக்கையெல்லாம் பூர்த்தியாகுமாம். மக்களின் ஆயுள் 400 வருடங்களாம். அதற்குப் பின் மீண்டும் யுகம் மாற- தா்மத்தின் அளவு குறையக் குறைய ஆயுளும் குறையுமாம்.

கிருதயுகத்தில் ஒரே மதம். ஒரே கடவுள் என்ற நிலைமைக்கு உலகம் வந்து விடுமாம்.

தருமரின் காலத்தில் நடந்த கதை ஒன்று உண்டு. அது துவாபர யுகத்தின் கடைசிக் கட்டம்.

அப்பொழுது ஒருத்தன் தன்னுடைய நிலத்தை இன்னொருவனுக்கு விற்றான். நிலத்தை வாங்கியவன் அதில் உழவு செய்ய ஆரம்பித்தான்.

நிலத்தைத் தோண்டிய போது அதில் ஒரு புதையல் கிடைத்தது. உடனே அந்தப் புதையலை எடுத்துக் கொண்டு அவன், நிலத்தை தன்னிடம் விற்றானே, அவனிடம் போகிறான்.

"இதோ பாருங்க, இந்தப் புதையல் உங்களுக்குத்தான் சொந்தம். நீங்கள் நிலத்தைத்தான் என்னிடம் விற்றீர்கள். புதையலை இல்லை. அதனால் புதையலை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

ஆனால் நிலத்தை விற்றவன் அதைவாங்க மறுத்து விட்டான்.

"இந்தப் புதையல் உனக்குத்தான் சொந்தம். எப்பொழுது நிலத்தை விற்றுவிட்டேனோ அப்பொழுது இதையும் விற்று விட்டதாகத்தான் அர்த்தம்" என்றான்.

இரண்டு பேரும் தருமரிடம் போய் தங்களுடைய விவகாரத்தைச் சொல்கிறார்கள். என்ன தீர்ப்பு சொல்வது என்று தெரியாமல் தருமர் முழிக்கிறார்.

கடைசியில், "சரி, ஒருபத்து நாள் கழித்து வந்து பாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

அதற்குள் என்ன ஆயிற்று என்றால் கலியுகம் பிறந்து விட்டது. அதன்பின் இரண்டு பேரும் வந்தார்கள்.

நிலத்தை விற்றவன் "புதையல் எனக்குத்தான் சேர வேண்டும். ஏனெனில் நான் நிலத்தை மட்டும் தான் விற்றேன்" என்கிறான்.

வாங்கினவன், "அதெல்லாம் கிடையாது. எப்ப நிலத்தை விற்றாரோ அப்பொழுதே புதையலையும் விற்று விட்டார் என்று தான் அர்த்தம்" என்கிறான்.

தர்மர் சிரித்தார். கலியுகம் பிறந்து விட்டது என்பதை உணா்ந்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தகவல் தொழில்நுட்பத்தை கிராமப்புறங்களுக்கு விஸ்தரிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

## அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

தகவல் தொழில் நுட்பத்தைக் கிராமப் புறங்களுக்கு விஸ்தரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் பல்வேறு முக்கிய நடவடிக்கைக்ள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் விதாதா நிலையங்களை அமைப்பதாகும்.

தற்போது 257 விதாதா நிலையங்களும் 700 நெனிசல நிலையங்களும் இயங்கிவருகின்றன. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புற இளைஞர் , யுவதிகள் மத்தியில் தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பலப்படுத்துவதாகும்.

தகவல் தொழில் நுட்பத்துறையின் வெற்றிக்கான பூர்வாங்க நடவடிக்கையாக உலக வங்கியின் நிதியுதவியுடன் ஐ.சி.ரி. நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்வித் தொழில் நுட்ப அறிவும் 30 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.2016 ஆம் ஆண்டில் இது 75 சதவீதமாக அதிகரிக்கப்படும் என் றும் ஒவ்வொரு துறையிலும் தக வல் தொழில் நுட்பத்தை ஒழுங்கான அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6-4)

## நீதிமன்ற அதிகார பிரிவுகளை பெயரிடுவதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

புதிதாக நீதிமன்ற அதிகார பிரிவுகளை பெயரிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் அதாவுட செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த புதிய நீதிமன்ற பிரிவுகளை அடுத்த மாதம் முதலாம் திகதி வர்த்தமானி மூலம் அறிவிக்க திட்டமிட்டுள்ளதான அமைச்சர் தெரிவித்தார்.

இதற்காக புதிய 60 நீதிமன்ற அதிகாரப் பிரிவுகள் பெயரிடப்படவுள்ளதெனவும் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன் ஒரு கட்டமாகவே மாவட்ட மற்றும் மேல்நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் புதிய நீதிமன்ற அதிகார பிரிவுகளை அடையாளம் காண்பதற்கான குழுக்களை நியமித்து அதன் மூலம் பெற்றுக் கொள்ளும் அறிக்கைக்கு அமைவாக அமைச் சரவையுடன் கலந்துரையாடப்படும் என நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன் பின்னர் புதிய நீதிமன்ற அதிகார பிரிவுகளுக்கான எல்லைகள் தொடர்பில் வர்த்தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6-4)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதான வீதியை அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோக தூண்கள இடமாற்றம் செய்யவேண்டியுள்ளதால் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை புன்னாலைக் கட்டுவன் , அச்செழு , புத்தூர் , அச்சுவேலி, ஆவரங்கால் , இடைக் காடு மற்றும் வடமராட் சிப் பிரதேசம் முழுவதும் மின்விநி யோகம் தடைப்படும் என சுன்னாகம் மின்பொறியியலாளர் காரியாலயம் அறிவித்துள்ளது. (4)

## இரதோற்சவம்

புலோலி பசுபதி ஈஸ்வர ஆலய இரதோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள் ளது.

தொடர்ந்து மறுநாள் சனிக்கிழமை காலை 10மணிக்கு கேணித் தீர்த்தமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (4-19)

## நன்னடத்தைக்குட்பட்ட சிறுவர் விபரம் சேகரிப்பு

யுத்த காலத்தில் பல்வேறு துன்புறுத்தல்களுக்குள்ளாகி நன்னடத்தைக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளைகள் குறித்த விபர அறிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள சிறுவர் நன்னடத்தை முகாம்கள் பலவற்றில் நேற்று இது தொடர்பான விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்ததோடு, இன்று மன்னார் மாவட்டத்திலும் சிறுவர் நன்னடத்தை நிலையங்களுக்குச் சென்று இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் இச்சிறுவர்களை சமூகத்துடன் இணைந்து நற் பிரஜைகளாக்கும் நோக்குடனேயே இவ் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. (6-4)

## இராசி பலன்

16-06-2010
(ஆனி '02 , புதன்கிழமை)
சதுர்த்தி பூற்பகல் 9.34 மணிவரை
பூசம் காலை 5.59 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 4.22 மணிவரை
நவாலி அட்டகிரி கந்தசுவாமி கொடி,
தொல்புரம் வழக்கம்பரை மகாமாரி கொடி ,நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மை கொடி,
சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் மனோன்மணி அம்மை கொடி,
புன்னாலைக்கட்டுவான் ஆயக்கடவை சித்தி விநாயகர் கொடி.

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம்,ரோகநிலை, பெரியோர் உதவி, சுபசெலவு. |
| இடபம் | இனிய சம்பவம்,பணவருவாய், முயற்சி கைகூடும், அந்நியர் சந்திப்பு. |
| மிதுனம் | வேலைச் சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், பொருள்விரயம், சிந்தனை மிகுதி. |
| கடகம் | நண்பர்கள் உதவி, சயனசுகம், திடீர்பயணம், விருந்துபசாரம். |
| சிங்கம் | தந்தை வழி உறவு, தொழிலில் ஆர்வம், பொருள்சேர்க்கை, உணர்ச்சிவசப்படல். |
| கன்னி | உறவினர் வருகை, முயற்சி கைகூடும், மனமகிழ்ச்சி, புதிய திருப்பம். |
| துலாம் | சுபநிகழ்வு, முயற்சிகைகூடும், மேன்மை, விருந்துபசாரம். |
| விருச்சிகம் | புதியதிட்டமிடல் ஆரோக்கியக் குறைவு, பெரியோர் மனஸ்தாபம், பிரயாண நன்மை. |
| தனுசு | போசன சுகம்,எதிர்பாராத மனஸ்தாபம், முயற்சி தாமதம், பணக்கஷ்டம். |
| மகரம் | திடீர் பயணம், செல்வாக்கு, முயற்சி கைகூடும், தன வருவாய். |
| கும்பம் | சத்துருஜெயம்,திடீர்பயணம், சுகவாழ்வு, காரிய நன்மை. |
| மீனம் | காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், தனவிரயம்,உறவினர் சந்திப்பு. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 150 |
| தக்காளி | 180 | 180 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 100 | 90 |
| கரட் | 200 | 180 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 110 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 |
| கரணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயிற்றங்காய் | 140 | 130 | 150 |
| லீக்ஸ் | 150 | 150 | 150 |
| பீற்றூட் | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 360 | 400 | 450 |
| போஞ்சி | 120 | 120 | 110 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 150 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 35 | 30 |

## கணனி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினாலும் கரித்தாஸ்- கியூடெக் வளங்களுடனும் குறுங்கால கணனி மற்றும் தக்வல் தொழில் நுட்பப்பயிற்சி நெறிகள் நடத்தப்பட உள்ளன.

பயிற்சி நெறிகள் மந்திகையிலுள்ள இளைஞர் தொழில்பயிற்சி நிலையத்தில் சனி ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் நடத்தப்படவுள்ளதுடன் பயிற்சி முடிவில் தகுதி வாய்ந்த அரசு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர் , யுவதிகள் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலுள்ள விதாதா வள நிலைய விஞ்ஞான தொழில் நுட்ப உத்தியோகத்தரிடம் வேலை நாட்களில் காலை நேரத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னராக தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (6)

## கோப்பாய் வெங்காய சங்கத்தை மீள்வும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(வேலணை)

கோப்பாய் வடக்கிலுள்ள விவசாய அபிவிருத்தி விற்பனை ஐக்கிய சங்கத்தை (வெங்காயச் சங்கம்) மீளவும் புனரமைப்புச் செய்து இயங்குவதற்கு ஆவன செய்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இச்சங்கமானது 1950 ஆம் ஆண்டு விவசாய சங்கமாக பதிவு செய்யப்பட்டு அப்பிரதேச விவசாயிகளுக்கு பெரும் சேவையாற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.




எனினும் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் பொருளாதார தடைகள் காரணமாக இச்சங்கம் செயற்படாமல் காணப்பட்டதாகவும் இதன் கட்டடத் தொகுதிகளில் சில சேதமடைந்து காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

எனவே தற்போது நாட்டில் அமைதிச் சூழ்நிலை காணப்படுவதால் இச்சங்கத்தை புனரமைப்புச் செய்து மீளவும் இயக்குவதற்கு உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-22)

## ஒலிம்பிக் விழா போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவினருக்கான பணர் வரையும் போட்டிக்கும் 16 வயது பிரிவினருக்கான சுவரொட்டிப் வரையும் போட்டிக்குமான தெரிவு நாளை பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவேபங்கு பற்றும் பாடசாலைகள் மேற்படி ஆக்கங்களை யாழ்.கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம்–வழக்கம்பரை அம்மன் கோவி ல் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம் பெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இதில் தினமும் மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ.சிவ.வை நித்தியானந்த சர்மாவின் ''தேவி மகத்துவம்'' பற்றிய இசைப்பேருரையும் இடம்பெறவுள்ளது. (6)

❖ ❖ ❖

(வேலணை)

சரவணை கிழக்கு பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் 27 ஆம் ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணமும் இடம் பெறவுள்ளது. (4-22)

## வெங்காயப் பயிர்ச் செய்கைக்கான காப்புறுதித்திட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

வெங்காயப்பயிர்ச்செய்கைக்கான காப்புறுதித்திட்டம் முதல் முறையாக நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ,கமநலசேவை நிலைய பிரதேச ரீதியான கால அட்டவணைக்கேற்ப இது அமுல்படுத்தப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் கமத்தொழில் காப்புறுதிச்சபை உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இக்காப்புறுதித்திட்டமானது ஆகக் குறைந்தது 1/2 ஏக்கர் நிலப்பரப்பிற்கு மேற்பட்ட தனிப் பயிராக செய்கை பண்ணப்படும் பயிர்களிற்கு ஏற்புடையதாக அமையும் எனவும் மிகையான மழையால் ஏற்படும் நீர்மட்ட அதிகரிப்பு மற்றும் கட்டுப்படுத்த முடியாத நோய் என்பவற்றால் முழுப்பிரதேசமும் பாதிக்கப்படும் போது ஏற்படுகின்ற சேதங்கள் கவனத்திற் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஏக்கரிற்கு 50 ஆயிரம் தொடக்கம் 80 ஆயிரம் வரையான தொகைக்கு காப்புறுதி செய்துகொள்ள முடியும் என்பதுடன் பயிர்ச் செய்கையாளர்கள் தமது கம நல சேவை நிலையங்ளினுகூடாக காப்புறுதி வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார். (6)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

(வேலணை)

கிளிநொச்சி பரந்தன் பகுதியிலுள்ள புதுக்குடியிருப்பு வீதியின் முதலாம் கட்டைப் பகுதியில் மீள்குடியேறியோரில் சிலர் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியை மேற்கொள்வதுடன் விற்பனையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் சட்டவிரோத உற்பத்தியை தடுக்குமாறு அப் பகுதியில் நிலை கொண்டுள்ள அரச படையினரிடம் கூறியும் எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லையென்று அப்பகுதியில் மீள்குடியேறியவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர். (6-22)

## அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 25 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று 29 ஆம் திகதி மாலை 4 மணிக்கு பொங்கல் மற்றும் விசேட வழிபாடுகளுடன் நிறைவு பெறும் என்று ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ வெ.சு.மகாதேவசர்மா தெரிவித்துள்ளார். (6-29)

## சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் வேண்டுகோளுக்கு இணங்கஜேர்மன் அரசின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 1.7 மில்லியன் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் ஜேர்மன் தூதுவர் எச்.இ. ஜென்ஸ் பிலொற்னர் மற்றும் திருமதி. மெய்க் கிலொற்னர் ஆகியோரால் மாணவர்களிடம் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற மேற்படி நிகழ்வானது பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ. கைலாயப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன், கோட்டக்கல்வி அதிகாரி கு. சிவாணந்தன்,பழைய மாணவ சங்க கொழும்புக் கிளை பிரதிநிதிகள் , அயல் பாடசாலை அதிபர்கள் உட்பட பலர் பங்கு பற்றி சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் போது பாடசாலைச் சமூகத்தினர் சார்பில் அதிபரால் ஜேர்மன் தூதுவரிடம் ஞாபக சின்னம் கையளிக்கப்பட்டது. (6-29)

## மீள்குடியேற்றம்

(வேலணை)

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள ஊற்றுப்புலம், மருதநகர்,பரவிப்பாஞ்சான், பன்னங்கட்டி ஆகிய நான்கு கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் எதிர்வரும் நாட்களில் மீள் குடியேற்றம் நடைபெறள்ளது.

இதில் செட்டிக் குளம் நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள், இம் முகாம்களில் வசித்து பின் உறவினர், நண்பர்களின் வீடுகளில் வசிப்போரும் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர். (6-22)



சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் ஏற்பாட்டில் ஜேர்மன் அரசின் சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் எச்.இ.ஜென்ஸ்பிலொற்னர் உரையாற்றுவதையும் மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்குவதையும் கல்லூரி அதிபர் அ.கைலாயப்பிள்ளை ஜேர்மன் தூதுவருக்கு நினைவுப் பிரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# யுத்தத்தின் பின்னரான இலங்கை

## பெல்ஜியத்தின் தலை நகரில் வட்டமேசை கலந்துரையாடல்

குளோபல் தமிழ் நியூஸ் நெற்

யுத்தத்திற்கு முன்பாக அல்லது யுத்தத்தின் பின் இலங்கையின் கள நிலவரங்களில் ஏதாவது மாற்றங்கள் இருக்கின்றனவா என நான் கேள்வி எழுப்பினால் அதற்கு எமக்கு கிடைக்கும் பதில் இல்லை என்பதே என ஈரோ ஏசியா நெற் ,பெல்ஜியத்தின் தலைநகர் பிரசில்சில் 11.06.2010 நடத்திய ஒரு நாள் வட்டமேசைக் கலந்துரையாடலில் முன் வைக்கப்பட்டது.

தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் , ஊடகச் செயற்பாட்டாளர்கள் ,புத்திஜீவிகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்துறைசார் நிபுணர்கள் , அதிகாரிகள் இந்த அமர்வில் கலந்துகொண்டனர்.

காலையில் இருந்து 7 பிரிவுகளாக இடம்பெற்ற இந்த அமர்வில் தெற்காசிய பிராந்தியத்தில் மனித உரிமை நிலைமைகள் ,சிறுபான்மை இனங்களின் உரிமைகள் ,அவற்றைப்பேணுவதற்கான முயற்சிகள் , தனிப்பட்ட மற்றும் உள்ளக ரீதியான சவால்கள், பிராந்திய ரீதியில் எதிர்கொள்ளும் சவால்கள் , ஆசிய மற்றும் ஐரோப்பிய மனித உரிமை ஸ்தாபனங்களின் செயற்பாடு, தெற்காசியாவில் மத ரீதியான



செயற்பாடுகள் ,பயங்கரவாதம் அவை ஆசிய ஐரோப்பிய அளவில் செலுத்தும் செல்வாக்கு குறிப்பாக சிறுபான்மை இனங்களின் உரிமைகள் முதலான விடயங்கள் குறித்து பல்துறை நிபுணர்கள் கருத்துக்களை முன்வைத்து விவாதங்களை நடத்தினார்கள்.

இறுதியாக பி.ப.4 மணியிலிருந்து 6 மணிவரை இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் ,அவற்றுக்கான தீர்வுகளும் தேடல்களும் ஐரோப்பிய மாதிரிகளும் என்ற விடயம் கலந்துரையாடப்பட்டது.

இதில் மனித உரிமைக்கான தெற்காசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தபான்போஸ் முக்கிய உரையை ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து இந்த விடயம் குறித்து இலங்கையின் சார்பில் அழைக்கப்பட்ட ஊடகவியலாளர் சுனந்தத்தேசப்பிரிய எழுத்தாளரும் ஆய்வாளரும் முன்னாள் ஆணைக்குழுக்களின் செயலாளருமான எம்.சி.எம்.இக்பால், ஊடகவியாளர் நடராஜா குருபரன், ஊடகவியலாளர் ராதிக தேவகுமார் ஆகியோர் தமது கருத்துக்களைத்தெரிவித்திருந்ததுடன் நடைபெற்ற விவாதங்களில் எம்.சி.எம். இக்பால் ,நடராஜா குருபரன் ,சுனந்தத்தேசப்பிரிய ஆகியோர் தமது தெளிவான பதில்களை முன்வைத்தனர். ஒரு கட்டத்தில் இலங்கையின் தூதரகத்தின் சார்பில் கலந்துகொண்ட டளஸ் விக்ரமரட்ண இரண்டாம் நிலை அதிகாரி ஆகியோர் மறு தரப்பில் குருபரன் மற்றும் இக்பால் ஆகியோருடன் கடுமையான விவாதங்களில் ஈடுபட்டிருந்தனர்.

முதலில் கருத்து வெளியிட்ட ஊடகவியலாளர் சுனந்ததேசப்பிரிய இலங்கையில் இன்று மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் பற்றிய பிரச்சினைகளே மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கின்றன. குறிப்பாக சட்டத்தின் ஆட்சியும் இனச் சிறுபான்மையினருக்கான அரசியல் தீர்வுமே முக்கிய பிரச்சினைகள் என்று குறிப்பிடலாம் என்ற கருத்துடன் தனது உரையை ஆரம்பித்தார்.இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. சட்டத்தின் ஆட்சி அற்றுப்போனதால் இந்நாட்டில் தமிழ் மக்களிடையே பல்வேறு அதிருப்திகள் வளர்வதற்கு அது காரணமாயிற்று. மறுபுறத்தில் பொருத்தமான அரசியல் தீர்வு உருவாக்கப்படாததானது தமிழ் ஆயுதக்குழுக்கள் வளர்வதற்கும் அவை நாட்டின் சட்டத்தின் ஆட்சியை மெல்ல மெல்ல அரித்துத்தின்பதற்கும் காரணமாயிற்று .

எமது நிறுவனங்கள் கடந்த 40 வருடங்களில் அரசியல் மயப்படுத்தப்பட்டும் இராணுவ மயப்படுத்தப்பட்டும் வந்து நிற்கின்றன.

கடந்த 3 தசாப்த காலமாக இந்நிலைமை உச்சத்தில் இருந்தது. இன்று முன்னாள் இராணுவ அதிகாரிகள் 28 பேர் நிர்வாக இயந்திரத்தின் முக்கியமான பல்வேறு பதவி நிலைகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 28 நியமனங்களும் அரசியல் நியமனங்கள். இதேவேளை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் வடக்கு-கிழக்கில் நாளாந்த நிர்வாகத்தில் பெருமளவில் தலையிடுபவர்களாகவே இருக்கின்றனர்.

போருக்குப்பின்னர் இயல்பு நிலைக்குத்திரும்பி வருவது என்பது அவ்வளவு இலகுவானதல்ல. இதற்குத்தேவையானது அரசியல் துரதிஷ்டியும் ஜனநாயக பொறிமுறையும் ஆகும். ஆனால் துரதிஷ்டவசமாக இவை இரண்டும் நம்மிடமில்லை.

இவ்விடத்தில் தான் 17ஆவது திருத்தமும் சுயாதீனுன ஆணைக்குழுக்களும் பயனாற்றக்கூடியவை. 1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் முக்கியமான அரசியல் அமைப்புத்திருத்தம் இது தான். இதன்ஊடாக மனித உரிமைகள்,இலஞ்சம் மற்றும் ஊழல் பொலிஸ்,பொதுச்சேவை,நீதித்துறை மற்றும் தேர்தல் ஆகியவற்றிற்கு சுயாதீனமான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இது எமது நிறுவனங்களை அரசியல் நீக்கம் செய்வதோடு இராணுவமயப்படுத்தலில் இருந்து விடுவிக்கும். ஆனால் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவோ பொலிஸ் ஆணைக்குழுவோ எதுவுமே இலங்கையில் இல்லை என்றாகிவிட்டது. இந்த அரசாங்கம் அரசியல் அமைப்புச்சபையை கலைத்துவிட்டு அரசியல் திருத்தம் ஒன்றின் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களை தூக்கி வீசிவிட திட்டமிடுகிறது.

இது இலங்கையில் சட்டத்தின் ஆட்சிக்கு அடிக்கப்படும் இறுதிச்சாவு மணியாகும். இது நடைபெறுமானால் பிரதான நீதியரசரையும் உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் தேர்தல் ஆணையாளரையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் போய்ச்சேரும்.

இனி 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிப் பார்ப்போம். இது இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஒரு பகுதியாக 1988இல் வந்து சேர்ந்தது. இது 8மாகாணங்களுக்கும் சிறிது அதிகாரத்தைப் பகிரும் என எதிர்பார்க்கப்பட்டது. 20 வருடங்கள் கடந்த பின்னரும் எதிர்பார்க்கப்பட்ட அதிகாரங்கள் மாகாணங்களுக்கு சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களுக்குக்கூட கிடைக்கவில்லை. மாறாக அதிகாரங்கள் இன்னும் மத்தியில் குவிக்கப்பட்டதைத்தான் நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது.



இப்போது போர் முடிவடைந்து ஒருவருடம் கடந்த பின்னரும் கூட தமிழ் மக்கள் தமக்கு எவ்வாறான சுயாதீனமான அதிகாரம் வழங்கப்படப்போகிறது என்பதை பார்ப்பதற்காக காத்திருக்கிறார்கள்.

மே 2009இல் ஜனாதிபதி இந்தியா சென்றிருந்த போது 13 ஆவது திருத்ததிற்கு மேலதிகமாக வழங்கப்போவதாக உறுதியளித்திருந்தார்.இப்போது அது முழுமையாகஅமுல்படுத்தப்படமாட்டாது என்று அவர் சொல்ல ஆரம்பித்திருக்கிறார். ஏனென்றால் அரசாங்கத்தின் கொள்கை என்னவென்றால் அங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று இருக்கிறது என்பதை அது ஏற்க மறுக்கின்றது.அது சொல்கிறது இலங்கையில் சிறுபான்மையினர் என்று எவரும் இல்லை. என்பதோடு நாம் எல்லோரும் ஒரே தேசத்தவர் என்பதுமாகும். ஆக உண்மையில் இதய சுத்தியுடனான அதிகாரப்பகிர்வு என்பது இலங்கைக்கு வெகு தொலைவில் இருக்கிறது.

எமக்கு சமாதானம் ,நல்லிணக்கம் என்பவை தேவையானால் நாம் இலங்கையில் எல்லாப்பிரஜைகளதும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகளை மதிக்க தயாராக இருத்தல் வேண்டும்.

இவ் அடிப்படையில் பார்த்தால் சட்டத்தின் ஆட்சியை மீளக் கொண்டுவருவதும் தமிழ்மக்களுக்கு சுய ஆட்சியை வழங்குவதும் என்பது நெருக்கடியான ஒன்றாகத்தான் இருக்கிறது.சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படாவிட்டால் நாடு அரசியல் ரீதியாக நியமிக் கப்பட்டவர்களாலேயே ஆட்சி செய்யப்படும். நியாயமான ஆரசியல் தீர்வுகாணப்படாவிட்டால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாகுபாட்டிற்கும் அநீதிக்கும் ஆளாக்கப்படுவார்கள்.

என்னுடைய அபிப்பிராயத்தில் இலங்கையில் எதிர்கொள்ளப்படும் ஏனைய அனைத்துப்பிரச்சினைகளும் இவ் இரண்டு பிரதான விடயங்களுள் உள்ளடங்கும் என்றே நான் கருதுகிறேன் எனத் தெளிவுபடுத்தினார். (தொடரும்)

# தண்டவாளத் தகர்ப்பின் பின்னால் இலங்கை அரசின் கரங்கள்?

## தினமணி ஆசிரியர் தலையங்கம்

தமிழ்நாடு விழுப்புரம் மாவட்டத்தின் பேரணி புகையிரதத் தண்டவாளம் தகர்க்கப்பட்டதன் பின்னணியில் இலங்கை அரசினுடைய உளவுப் பிரிவினரின் கரங்கள் உள்ளனவா? என்று சந்தேகம் தெரிவித்து இந்தியாவின் தினமணி பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டி உள்ளது.

சதி... சதி... சதி ... என்கிற தலைப்பில் இந்த ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது. இந்த ஆசிரியர் தலையங்கத்தை அப்படியே வாசகர்களின் பார்வைக்குத் தருகின்றோம்.

அமைதிப் பூங்காவான தமிழகம் வன்முறையின் விதைக்கலனாக மாறுவது என்பதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. தீவிரவாதம் தமிழகத்தில் வேரூன்றுவது என்பது வருங்காலச் சந்ததியரின் வாழ்க்கையைச் சீர்குலைக்கும் என்பதிலும் கட்சிபேதமின்றி யாருக்கும் எந்தவிதச் சந்தேகமும் இருக்க வழியில்லை.

விழுப்புரத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில் ஒரு மீற்றர் நீளத்துக்கு ரயில்வே தண்டவாளம் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டிருப்பது என்பது அதிர்ச்சியளிக்கும் செய்தி. இது நிச்சயமாகத் தற்செயலாக நடந்த நிகழ்வு அல்ல.

சனிக்கிழமையன்று இந்த ரயில் தடத்தில் சென்ற மலைக்கோட்டை விரைவு ரயில் அதிர்ஷ்டவசத்தால் மிகப்பெரிய விபத்திலிருந்து தப்பியது. விபத்தைத் தடுத்த ரயில்வே ஊழியர்கள் அனைவரையும் தினமணி பாராட்டுகிறது.தண்டவாளம் தகர்க்கப்பட்டிருந்த இடத்தில் விடுதலைப்புலி ஆதரவாளர்களின் துண்டுப்பிரசுரங்கள் காணப்பட்டதாக காவல்துறை தெரிவிக்கிறது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் சகோதரர்கள் என்று குறிப்பிட்டு இலங்கை அதிபர் ராஜபக்சவின் இந்திய விஜயத்தைக் கண்டிப்பதாக அந்தத் துண்டுப் பிரசுரங்கள் தெரிவிப்பதாகக் காவல்துறை கூறுகின்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்கள் விடுதலைப்புலி ஆதரவாளர்கள் என்றால் அவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

வன்முறையில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மன்னிக்கப்படக் கூடாது. சட்டத்தின் பிடியிலிருந்து தப்பக் கூடாது. மேலும் பல அப்பாவி உயிர்களைப் பலி கொண்டு தங்களது பழியைத் தீர்த்துக் கொள்ள முயலும் யாரையும் அவர்களது இலட்சியம் நல்லதாகவே இருந்தாலும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேநேரத்தில் மாநிலக் காவல்துறை தலைவர் லத்திகா சரண் முழுமையான விசாரணை நடைபெறும் முன்பே ஒருசில மணிநேரங்களில் இந்தச் சம்பவத்துக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் தொடர்பு இல்லை என்று அவசர அவசரமாக அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன என்பது தெரியவில்லை.

புலனாய்வுத் துறை ஐ.ஜி.யான ஜாபர் சேட் இது விடுதலைப்புலி ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட செயல்தான் என்று விசாரணைக்கு முன்பே அறிக்கை கொடுத்தது ஏன் என்பதும் புரியவில்லை.

சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் சில துண்டுப் பிரசுரங்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு அவசர ஆத்திரத்தில் சாதாரண பொதுஜனம் முடிபு எடுப்பது சகஜம். பத்திரிகையாளர்கள் கூட பல சந்தர்ப்பங்களில் கண்ணில் தெரியும் தடயங்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு எழுதிவிடுவதும் உண்டு.

அப்படி நடக்கும் போதெல்லாம் காவல்துறையினர் அதை வன்மையாகக் கண்டிப்பதுடன் முழுமையான விசாரணை இல்லாமல் முடிவுக்கு வருவதும் கருத்துத் தெரிவிப்பதும் தவறு என்று பத்திரிகையாளர்களைக் கடிந்து கொள்வதும் உண்டு.

ஆனால் விழுப்புரம் அருகே ரயில் தண்டவாளம் தகர்ப்பு விடயத்தில் காவல்துறை முழுமையான விசாரணை செய்து குற்றவாளிகளைப் பற்றிய தகவல்கள் பெறுவதற்கு முன்பே சம்பவம் நடந்த ஒருசில மணி நேரங்களில் அவசரப்பட்டு கருத்துத் தெரிவிக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்பது புரியவில்லை.

முன்பே குறிப்பிட்டிருந்தது போல விடுதலைப்புலி ஆதரவாளர்கள் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருந்திருந்தால் அவர்கள் கடுமையான தண்டனைக்குரியவர்கள் என்பது மட்டுமல்லாமல் தமிழகத்தில் தலையெடுக்கும் தீவிரவாதம் எந்த வகையினதும் ஆனாலும் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியதுதான்.

ஆனால் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் வேறு ஏதாவது சக்திகள் உள்ளனவா என்பதையும் கண்டறிய வேண்டிய கடமை காவல்துறைக்கு உண்டு. எல்லா நாடுகளும் அண்டை நாடுகளில் தங்களது உளவுத்துறையின் மூலம் செயல்படுவது புதியதொன்றும் அல்ல.இந்திய நீதிமன்றங்களால் தேடப்படும் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சர் என்கிற போர்வையில் தனது குழுவுடன் அழைத்து வந்து இந்தியப் பிரதமருடன் கைகுலுக்க வைத்து தனது தாயகம் திரும்பியிருக்கிறார் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ.இதனால் எழும்பியிருக்கும் சர்ச்சையும் இந்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கும் தர்மசங்கடமும் கொஞ்ச நஞ்சமல்ல. சமீபகாலமாக தமிழ்நாட்டில் மட்டுமேபேசப்பட்டு வந்த ஈழத் தமிழர் பிரச்சினை இப்போது தேசிய அளவிலான ஊடகங்களில் முன்னுரிமை தரப்படுகின்றன.

பிரச்சினையைத்திசை திருப்ப இலங்கை அரசின் உளவுத்துறையே கூட ஏன் இப்படியொரு சதித் திட்டத்தை அரங்கேற்றி பழியை விடுதலைப் புலிகள் மீதுபோட்டுஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கைது பிரச்சினையைமூடி மறைக்க முற்பட்டிருக்கக்கூடாது?

துண்டுப் பிரசுரத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு முடிவெடுப்பது சிறுபிள்ளைத்தனம்.யாரும் யார் பெயரிலும் துண்டுப் பிரசுரம் அச்சிட்டு சம்பவம் நடந்த இடத்தில் பார்வையில்படுவது போல போட்டிருக்கலாம்.

பொறுப்பான காவல்துறை அதிகாரிகள் முழுமையான விசாரணையை மேற்கொண்டு துப்புத்துலக்கி தக்க ஆதாரங்களுடன் உண்மையை வெளிக்கொணர்வதுதான் தமிழகக் காவல்துறைக்குப் பெருமை சேர்க்கும்.தவறு இழைத்தது விடுதலைப்புலி ஆதரவாளர்களாக இருந்தாலும் இலங்கை அரசின் கைப்பாவைகளாக இருந்தாலும் வேறு தீவிரவாத இயக்கத்தவர்களாக இருந்தாலும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும்சதிகாரர்கள் யாராக இருந்தாலும் அப்பாவி மக்களை பழி வாங்காதீர்கள்.

இந்த நாச வேலையில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அதற்கு ஆயிரம் நியாயங்கள் சொன்னாலும் ராமனுக்கு சடாயு சொன்னதைத்தான் நினைவுபடுத்தவேண்டியுள்ளது.

சீதையை ராவணன் கவர்ந்து செல்ல துக்கம் தாளாமல் காணும் அனைத்தின் மீதும் கடும்கோபம் கொள்ளும் ராமனிடம் சடாயு தன் உயிர் பிரியும் முன் சொல்கிறார். ஊறு ஒருசிறியோன் செய்ய முனிதியோ உலகை உள்ளம் ஆறுதி தனிப்பட்ட ஒருவரின் துயரத்தை அனைவருக்குமாக மாற்றுகிற பழி வாங்கும் படலத்துக்கும் திசை திருப்பும் முயற்சிக்கும் வெறிச்செயல்களுக்கும் எங்கள் தமிழகம் களமாவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

## சீமானுடன் இணையும் விஜய்

தம்பி படத்தை அடுத்து வாழ்த்துக்கள் படத்தை இயக்கினார் சீமான். இந்த கால கட்டத்தில் சீமான் விடுதலைப்புலிகளின்



தலைவர் பிரபாகரனை சந்தித்த போது வாழ்த்துக்கள் மாதிரியான படம் இனி எடுக்க வேண்டாம். தம்பி மாதிரியான படம் எடுங் கள் என்று சொல்லியியிருக்கிறார்.

உடனே சீமான் கோபம் என்று படம் எடுக் கப் போகிறேன் என்று சொல்ல பிரபாகர னுடன் பக்கத்தில் இருந்தவர் சினம் என்று தலைப்பு வையுங்கள் என்றாராம்.

அதற்கு பிரபாகரன் கோபம் என்று சொன்னால்தான் அதில்அழுத்தம் இருக்கி றது.ஒரு வேகம் இருக்கிறது. அந்த தலைப் பிலேயே படம் எடுங்க .அதற்கு என் வாழ்த் துக்கள் .ஆனால் வாழ்த்துக்கள் மாதிரி மென்மையான படம் எடுக்க வேண்டாம் என்று சொன்னாராம்.

இறுதிக்கட்டப்போர் நாம் தமிழர் இயக் கம் நாம் தமிழர் அரசியல் கட்சி என்று இடை யில் எவ்வளவோ நடந்து விட்டது. இப்போது சீமான் விஜய்யை வைத்து படம் இயக் குகிறார். இந்தப்படத்திற்கு பகலவன் என்று பெயர் வைத்திருப்பதுடன் இதனை கலைப் புலி எஸ். தாணு தயாரிக்கிறார்.

இது குறித்து இயக்குநர் சீமான் தெரிவிக் கையில்,நானும் தம்பி விஜய்யும் இணைந்து புதிய படம் செய்வது உறுதியானதுதான். அண்ணன் தாணுவுக்காக இந்தப் படத்தை உருவாக்கிறோம். தரத்தில் இரண்டு மடங்கு தம்பியாக இந்தப் படம் அமையும் என்று தெரி வித்துள்ளார்.

தயாரிப்பாளர் தாணு கூறுகையில், சச் சின் படத்திற்கு பின் தம்பி விஜய்யுடன் இணைந்து செயல்படுகிறேன். தம்பிசீமானைப் பற்றி நான் சொல்லத் தேவை யில்லை. அவருடைய இயக்கத்தில் படம் செய்வது பெருமையாக உள்ளது. படம் குறித்த விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (6)

## இசைக்கு மொழி தடையல்ல; ஏ.ஆர். ரகுமான் தெரிவிப்பு



இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானின் உலக இசைப் பயணத்துக்கு அமெரிக்காவில் மிகுந்த வரவேற்பு கிடைத்து வருகிறது.ஜெய்கோ உலக இசைப் பயணம் என்ற பெயரில், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உலக இசைப்பயணத்தை அமெரிக்காவில் தொடங்கியுள்ளார்.

நியூயோர்க் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை தனது முதல் இசைப் பயணத்தை தொடங்கிய அவர் பின்னர் நியூஜெர்சி, விஜென்யா ஆகிய இடங்களில் நடத்தினார்.

முதல் மூன்று இசை நிகழ்ச்சிகளை ஏறத்தாழ 40 ஆயிரம் ரசிகர்கள் கண்டு ரசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வோஷிங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இசையமைத்து பாடிய பிரபலமான சையா சையா,,, அரபிக் கடலோரம் ஆகிய பாடல்களுக்கு ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருந்தது.

அமெரிக்காவில் மேலும் 7 இடங்களில் இசை நிகழ்ச்சியை நடத்தும் ரகுமான் லண்டனில் தனது இசைப் பயணத்தை நிறைவு செய்கிறார்.

இது குறித்து பேசிய ஏ.ஆர்.ரகுமான், இது ஒரு பொலிவுட் படைப்பு என்று நாங்கள் நினைக்கவில்லை. எல்லைகளை தகர்த்து அனைவரும் ரசிக்க வேண்டும் என்று நினைத்தோம். அதனை சாதித்துள்ளோம். இசைக்கு மொழி தடை கிடையாது என்பதை இந்த இசைப் பயணம் எடுத்துக் கூறுகிறது என்றார். (6-4)

## வாக்குறுதி அளிக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்படவில்லை

### கயந்த கருணாதிலக எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் அரசாங்கத்தினால் உறு தியளிக்கப்பட்ட சம்பள உயர்வு இதுவரையில் வழங்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அதிநவீன சொகுசு வாகனங்களுக்கான வரிகளை 65 வீதத்தினால் குறைத்துள்ள அரசாங்கம் ஜனவரி மாதம் முதல் அரசாங்க ஊழியர்களுக்கு2500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக தெரிவித்த போதிலும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

மரக்கறி, கோதுமை மா மற்றும் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்வதாக சுட்டிக்காட்டிய அவர் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றத்தினால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளார். (6-4)

## வேலியே பயிரை மேய்ந்தால்...

நாட்டில் சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்பது நுகர்வோர் அதிகார சபையின் கடுமையான உத்தரவாகும். இந்த நடைமுறை நேற்று முன்தினம் முதல் அமுலாக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையை அரச அதிகாரிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சம்பவமொன்று அநுராதபுரத்தில் இடம்பெற்றுள் ளது. விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாகக் கூறி பெருந்தொகைப் பணத்தை வசூலித்திருக்கிறார்கள் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள்.

அவ்வாறு இரண்டு இலட்சம் ரூபா வரை பணம் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் ஐவரை பணியிலிருந்து நீக்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பணிப்புரை விடுத்துள்ளார். நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் தம்மிடம் பணம் வசூலித்ததாக வவுனியா பொலிஸாருக்கு 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்ததோடு ,சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அரச அதிகாரிகள் இவ்வாறு சுயலாபம் கருதி செயற்படுவார்களேயானால் நாட்டின் எதிர்காலம் என்னவாக மாறப்போகிறது என்பது பற்றி ஐயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## ஜி.எஸ்.பி.வரிச்சலுகை தொடர்வதால் நாடு அனுகூலமடையும் - இலங்கைத்தூதர்

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தொடர்வதால் நாடு அனுகூலமடையும் என்று இலங்கை கருதுவதாக பெல்ஜியம் லக்ஸம்பேர்க் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிற்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தொடர்பான சவால்களை கருத்திற்கொண்டு நல்லாட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கும் கடந்த சில மாதங்களாக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் இலங்கையின் தேசிய நலனுக்குப் பாதகமாக இருக்கமாட்டாது என்று அவர் அறிக்கையில் நம்பிக்கை தெரிவித்தார்.

அண்மையில் இருதரப்புகளுக்கும் இடையே இடம்பெற்ற உயர்மட்ட பேச்சு வார்த்தைகளையும் புதிய மட்டத்திலான புரிந்துணர்வினால் ஏற்பட்ட உறவுமுறைகளையும் மனதிற்கொண்டு இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை தொடர்ந்து கிடைக்கச் செய்வது பேருதவியாக இருக்கும்.

இலங்கைத் தூதுக்குழு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இரண்டு தடவைகள் மேற்கொண்ட விஜயங்களின் போதும் அரசியல் முன்னேற்றங்கள், மனிதநேய உதவிகள், அபிவிருத்திக்கடன், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியன உட்பட உறவு முறை தொடர்பான பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து ஐரோப்பிய சபை, அங்கத்துவ நாடுகள் , ஐரோப்பிய பாராளு மன்றம், ஐரோப்பிய ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதி நிதிகளுடன் ஆராயப்பட்டது என்றார். (6-4)


ஸ்ரீஅம்மா பகவான் சரணம்

### ஸ்ரீ அம்மா பகவான் அன்மீகப் பேருரையும் கூட்டுப் பிரார்த்தனையும்



ஸ்ரீஅம்மா பகவானின் ஆன்மீக அருளுடன் கூடிய ஐந்து மணிநேர இந்த அருள்மிகு பேருரையில் கனடா நாட்டில் அம்மா பகவானின் அருள் பெற்று வரும் பல ஹோமங்கள், பயிற்சிப் பட்டறைகள், தியான வகுப்புக்கள் நடத்தியவரான ஆன்மீகப் பேரொளி திருவாளர் தி.நளேந்திரன்ஜி அவர்களால் நடத்தப்படவுள்ளது. உங்கள் பிரச்சினை, உங்கள் எதிர்பார்ப்புகள் எதுவாக இருந்தாலும் அவற்றை வெற்றி கொள்ளும் முறைகள் காட்டித் தரப்படும். தவறாது கலந்து கொண்டு கேட்டு அனுபவித்து அம்மாபகவானின் அருள் ஆசியையும் நயன தீட்சையும் பெற்று ஆனந்தப் பெருவாழ்வு பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அம்மா பகவான் சரணம்

இடம்:- யாழ்.வீரசிங்கம் மண்டபம்,யாழ்ப்பாணம்.

காலம்:- 20-06-2010 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:-பி.ப 1.00 மணி

மேலதிக விபரங்களுக்கு:

யாழ்.மாவட்ட அம்மா பகவான் சற்சங்கங்கள்

021-222 5868,021-4921657,021-3212251,0777651719

குறிப்பு:- நிகழ்ச்சி முடிவில் இ.போ.ச.பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(1684)


## 16.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


### நிகழ்வுகள்

- 1745- பிரித்தானியர் கேப் பிறெட்டன் தீவை பிரெஞ்சுப் படைகளிடம் இருந்து கைப்பற்றினர். இது தற்போது கனடாவின் ஒரு பகுதியாகும்.
- 1779- ஸ்பெயின் பெரிய பிரித்தானியா மீது போரை அறிவித்தது. கிப்ரால்ட்டர் மீதான முற்றுகை ஆரம்பமானது.
- 1819-குஜராத்தில் இடம்பெற்ற 8.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் மாண்டனர்.
- 1883- இங்கிலாந்தில் விக்டோரியா அரங்கில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 183 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1897- ஹவாய்க் குடியரசை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1911- விஸ்கொன்சின் மாநிலத்தில் 772 கிராம் விண்கல் வீழ்ந்ததில் களஞ்சியம் ஒன்று சேதமடைந்தது.
- 1940- லித்துவேனியாவில் கம்யூனிச ஆட்சி உருவானது.
- 1963- உலகின் முதலாவது பெண் விண்வெளி வீரர் ரஷ்யாவின் வலன்டீனா டெரெஷ்கோவா வஸ்தோக் 6 விண்கலத்தில் பயணமானார்.
- 1964-லியோனிட் பிரெஷ்னேவ் சோவியத் ஒன்றியத்தின் அதிபரானார்.
- 1983-யூரி அந்திரோப்பொவ் சோவியத் ஒன்றியத்தின் அதிபரானார்.
- 1994 -சீன விமானம் TU-154 புறப்பட்டு 10 நிமிடங்களில் வெடித்ததில் 160 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1971- டுபாக் ஷகூர்,அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்
- 1925- சித்தரஞ்சன் தாஸ்,இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1870)

**1976 -தென்னாபிரி க்காவில் சுவெட் டோவில் 15,000 கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப் பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 566 மாணவர்கள் கொல்லப் பட்டனர். அத்தி னத்தை தென்னா பிரிக்கர்கள் தென்னா பிரிக்க இளைஞர் நாள் ஆக அனுஸ்டிக் கின்றனர்.**



# தன்னார்வ தொண்டு நிறுவனசெயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாற்றம்

(கொழும்பு)

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலு கல்ல தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை கண்காணிக்கும் நோக்கில் நிகழ்த்தப்படவில்லை எனவும் இது ஓர் நிர்வாகக் கட்டமைப்பு மாற்றம் மட்டுமே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமான காலம் முதல் தன்னார்வ தொண்டு நிறுவன செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க உள்துறை அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் குடிவரவு குடியகல்வு திணைக்களம், தன்னார்வ தொண்டு செயலகம், கடவுச்சீட்டுத் திணைக்களம் ஆகியன அவரது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்களுக்கான வகுப்புக்கள்

(நல்லூர்)

யாழ் மாவட்ட லயன்ஸ் கழகங்களின் 2010-2011 ஆம் ஆண்டுக்கான தலைவர், செயலாளர், பொருளாளர், அங்கத்துவப் பணிப்பாளர் ஆகியோருக்கான வகுப்புக்கள் மாவட்ட ஆளுநர் எஸ்.ஜெயவக்சலன் MJF தலைமையில் இன்று மாலை 5 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புக்களை முதலாவது உப-மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர் னாண்டோ MJF, இரண்டாவது உப-மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா MJF கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்வகுப்புக்களை நடத்துதற்காக முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ். சிவ பாத சுந்தரம் MJF, லயன் டாக்டர் டபிள்யூ . ஏ.பேடினன்ட் MJF, லயன்.எஸ்.ராகவன் ஆகியோர் கொழும்பில் இருந்து வருகை தந்து கருத்துரைக்கவுள்ளனர். (6-134)

# தும்பு,தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பல மாதங்களாக இயங்கவில்லை

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆவரங்கால் விவேனாகந்தா சனசமூக நிலை யத்தினரால் யு.என்.டி.பி நிறுவன நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலையும் தோல் பதனிடும் உற்பத்தித் தொழிற்சாலையும் கடந்த பல மாதங்களாக இயங்கவில்லை என அப்பகுதி மக்கள் விச னம் தெரிவித்துள்ளனர்.

இத்தொழிற்சாலைக்கு யு.என்.டி.பி நிறுவனம் இருபத்தைந்து இலட் சம் ரூபா வரை நிதி வழங்கியதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தொழிற்சாலையில் பயிற்சி பெற்று தொழில்புரிந்து வந்த பல யுவதிகள் அச்சுவேலி பனை, தென்னை கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட் டுள்ள தும்புத் தொழிற் சாலையில் இணைந்து வேலை செய்து வரு கின்றமை குறிப் பிடத்தக்கது. (6-134)

## கடத்தப்பட்ட நபர் தப்பி வந்து பொலீஸில் தஞ்சம்

மன்னார் மாவட்டத்தில் கடந்த சனிக் கிழமை இளைஞர் ஒருவர் இனம் தெரியாத வர்களால் கடத்தப்பட்டு பின் தப்பி வந்து பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இவர் கடத்தப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டுள்ளதுடன் மூன்று இலட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டு கடத்தப்பட்டதாகக் கூறப் படுகிறது. இவர் தப்பி வந்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து மன்னார் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-4)

# அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள்

## அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறைமையின் அடிப்படையில் தேர்தல்கள் அடிப்படையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வரவு செலவுத்திட்டம் மீதான விவாதங்களின் பின்னர் தேர்தல் முறை மாற்றம் குறித்த யோசனைத்திட்டம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் அடுத்த வருடம் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை நடாத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. உத்தேச சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரினால் இது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் 70 வீதமான உறுப்பினர்கள் தொகுதி வாரியாகவும் 30வீதமான உறுப்பினர்கள் விருப்பத் தெரிவின் மூலமாகவும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை தேர்தல் தொகுதி மீள் நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக உள்ளூராட்சி மன்ற அமைச்சு இது பற்றி அறிவித்துள்ளது. (6-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வரகு

Botanical Name - Paspalum Scrobiculatum
Family - Gramineae
Engl - Kodo millet/
Sinh- Amu

இச் செடி ஓராண்டுக்குரியது. தண்டு 60-90 செ.மீ நீளமானது. நிலக்கீழ் தண்டில் தண்டு இறுக் கமாக பிணைக்கப்பட்டிருக்கும். நிமிர்ந்து தண்டு வளரக்கூடியது. இலைகள் அடியில் இருந்து மேல் நோக்கி வளரும். இலைகள் நேராக அல்லது சற்று சரிந்து வளரக் கூடியது. 15-20 செ.மீ நீளமானது. 2-8 மி.மீ அகலம் வரை செல்லும். நுனி கூரானது. மென்மையான மயிர்கள் இலையின் மேல் காணப் படும். பூக்களின் கீழ் காணப்படும். பூந்துணர் தட்டையாகவும் மென்மையாகவும் காணப்படும். மேல் அடுக்கிலுள்ள பூந்துணர் வன்மையாகவும் கபில நிறமாகவும் பளபளப்பானதாகவும் நீள்வட்டமானதாகவும் மேலிருந்து பார்க்கும் போது பூக்களின் அடுக்கு உட் குழிவானதாகவும் காணப்படும்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

உலர்வலயத்தில் கால போகத்தில் கிடைக்கும் மழை வீழ்ச்சி இப் பயிரின் உற்பத்திக்கு போதுமானதாகும். நெடுந்தீவுப் பகுதியில் கூடுதலாக பயிரிடப்படுகிறது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**100 கிராம் வரகிலுள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| ஈரலிப்பு | 12.8கி |
| சக்தி | 309கி.கலோரி |
| புரதம் | 8.3கி |
| கொழுப்பு | 1.4கி |
| காபோவைதரேற்று | 65.9கி |
| கல்சியம் | 27மி.கி |
| பொசுபரசு | 188மி.கி |
| இரும்பு | 5.2மி.கி |
| தயமின் | 330 மைக்ரோகிராம் |
| ரைபோபிளேவின் | 90 மைக்ரோகிராம் |
| நியாசின் | 2மி.கி |
| நார்ப்பொருள் | 9.0கி |

**மருத்துவப்பயன்கள்**

இதன் நெல், உருண்டு ஒருவித கருநிற உமியால் மூடப்பட்டிருக்கும்.

**வரகு நெல்லிருந்து வரகு புழுங்கலரிசி தயாரிக்கும் முறை:**

வரகை நீர் விட்டு நெல் அவிப்பதுபோல அவித்து வெயிலில் நன்கு காயவைத்து, அரைக்கும் ஆலையில் அரிசியாக்கி புடைத்து, கொளித்து அரிசியை வேறாக்கவும். நீரிழிவு நோயாளிகள், உடல்பருமன் அதிகரித்தவர்கள் வாரத்திற்கு இரு நாட்களாவது வரகரிசியை சோறாக சமைத்து உண்ணுதல் சிறந்தது.

**நீரிழிவு நோயாளிகளிற்குரிய வரகு சேர் இலைக்கஞ்சி தயாரித்தல்.**

வரகுப்பச்சரிசி-350கி
முளைவிட்ட பயறு-60கி
தேவையான இலைவகை-தேவையான அளவு
(சிறுகுறிஞ்சா, வல்லாரை, கொவ்வை, பொன்னாங்காணி)
உப்பு-தேவையான அளவு




தண்ணீர்-4 லீற்றர்

பயறை முதல் நாள் தண்ணீரில் நன்கு கழுவி சிறிது நேரம் ஊறவைத்து வடித்து சுத்தமான வெள்ளைத்துணியில் கட்டி முளைவர விட்டு பின்பு பயன்படுத்தவும். அரிசியை கழுவி தண்ணீரில் அவியவிட்டு, அரிசி அரைப்பதத்திற்கு அவிந்த பின்னர், முளை பயற்றை சேர்த்து அவிய விடவும். பின்னர் சிறுகச்சிறுக அரிந்த இலைகளில் இருந்து எடுத்த சாற்றை விட்டு, உப்பையும் சேர்த்து இறக்கி பரிமாறலாம்.

**வரகரிசிமா தயாரித்தல்**

வரகு பச்சையரிசியை கழுவி உமி, கல், மண் அகற்றவும். வெயிலில் நன்கு காய வைத்து மாவாக்கவும். பின்பு அரித்து காற்றுப்படாமல் அடைத்து வைத்துக் கொள்ளவும். இவ்வரகரிசிமாவை நீரிழிவு நோயாளிகள், உடற்பருமன் அதிகரித்தவர்கள் இடியப்பம், ரொட்டி, தோசை, களி போன்றவற்றை தயாரித்து உணவாக பயன்படுத்தலாம்.

**நீரிழிவு நோயாளிகளுக்குரிய சத்துமா**

வரகுப் பொரியரிசிமா-3 பங்கு
குத்தரிசி பொரியரிசிமா-2 பங்கு
வறுத்த உளுத்தமா-ஒரு பங்கு
வறுத்த பயத்தம்மா-ஒரு பங்கு
சீந்தில் மா-1/4பங்கு

மேலே கூறிய எல்லா மாக்களையும் ஒன்றாகச் சேர்த்து சுடு நீர் விட்டு சிறிதளவு வறுத்த தேங்காய்ப்பூ சேர்த்து குழைத்து உண்ணலாம்.

சாதாரணமாக நீரிழிவு நோயாளி தவிர்ந்தவர்களும் இதனைப் பயன்படுத்தலாம். அவர்கள் வறுத்த தேங்காய்ப்பூ, சீனி சேர்த்து சுடு நீரில் குழைத்து உண்ணலாம். இதனால் உடலை திடமாக வைத்திருக்கக் கூடியதாக இருக்கும். ஏதாவது நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அச் சமயத்தில் எடுக்கக் கூடியதும் இலகுவாக சமிபாடடைந்து, அகத்துறிஞ்சப் படக்கூடியதுமான

**வரகரிசி உப்புக் கஞ்சி**

வரகுப் புழுங்கல் அரிசி-50கி
நீர்-4 டம்ளர்
வெந்தயம்-1/4 தேக்கரண்டி
உள்ளி-3 பல்லு
உப்பு -தேவையான அளவு

வரகுப் புழுங்கல் அரிசியை நன்றாகக் கழுவி உமி முதலியவற்றை நீக்கி, நீரைக் கொதிக்க வைத்து வரகுப் புழுங்கல் அரிசியை சேர்த்து வேகவிடவும். அரிசி அவிந்து வரும் போது வெந்தயம், வெட்டிய உள்ளி ஆகியவற்றை சேர்த்து அவிய விடவும் இறக்கும் போது உப்பைச் சேர்க்கவும்.

எமது பிரதேச மக்கள் தானியங்கள், சிறு தானியங்கள் ஆகியவற்றை தமது உணவுப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதில்லை. பெரும்பாலான மக்களுக்கு தானியங்கள் பலவற்றை இனங்கண்டு கொள்வதும் சிரமமாக உள்ளது. எமது ஆரோக்கியத்தை மேம் படுத்தக் கூடிய தானியங்கள், சிறு தானியங்கள் முதலியவற்றை எமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வதோடு மட்டுமன்றி, இளைய சமுதாயம் அவற்றை பயன்படுத்தக் கூடிய வழிகாட்டலையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

வரகு வைக்கோலை எமது மருத்துவத்தில் சில மருந்துத் தயாரிப்புகளுக்கு வேண்டிய ஆற்றுத்தும்மட்டி, இலைக் கள்ளி, கொம்புக் கள்ளி போன்ற மூலிகைகளில் இருந்து சாறு எடுப்பதற்காக, இவ்வைக் கோலை கொளுத்திய தீயில் மேற்கண்ட மூலிகைகளை வாட்டி சாறு எடுப்பது வழக்கம்.

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE

# கொழும்பு வணிகவள நிலையம்

## முன்னோடிப் பரீட்சை

## க.பொ.த.உயர் தரம்-2010

### கணக்கீடு - I நேரம் : 1 மணி

#### பகுதி - I

◆1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும் போது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்கு முன் உள்ள கூட்டில் √ என அடையாளம் இடுக. உ + ம் ☼

(1)செலவுகளை வருமானங்களுக்கெதிராக எதிரீடு செய்வதில் பிரயோகிக்கப்படும் கணக்கியற் கோட்பாடு

(1) அட்டுறு கோட்பாடு (2)பொருத்திப்பார்த்தல் கோட்பாடு
(3) புத்திசாதுரிய கோட்பாடு (4) கிரயக் கோட்பாடு
(5) பண அளவு கோட்பாடு

(2)சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பவற்றை வகைப்படுத்துவதுடன் ஐந்தொகையில் அனைத்து உருப்படிகளின் முன்னால் பெறுமதியொன்று இருத்தல் என்பதுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள்

(1) கால எண்ணக்கரு, தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
(2) பொருண்மை எண்ணக்கரு, பண அளவீட்டு எண்ணக்கரு
(3) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு, பண அளவீட்டு எண்ணக்கரு
(4) பண அளவீட்டு எண்ணக்கரு, கால அளவீட்டு எண்ணக்கரு
(5) தேறல் எண்ணக்கரு, கிரய எண்ணக்கரு.

(3)பங்குடமை வியாபாரம் ஒன்றில் பங்குடமைச் சட்டம் காணப்பட்ட போதிலும் உடன்படிகைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் செல்வாக்குச் செலுத்தும் எண்ணக்கரு.

(1) கிரய கோட்பாடு (2) கொள்கை மாறா எண்ணக்கரு
(3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
(4) பொருண்மை
(5) ஆவர்த்தன எண்ணக்கரு

(4)சன்முகா நிறுவனம் கட்டிடம் ஒன்றினை மாதாந்த வாடகை ரூபா 10 000 படியாக எடுத்தனர். மீளப் பெறத்தக்க வைப்பாக ரூபா 50 000 ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டது. கணக்கீட்டுச் சமன்பாட்டில் (1 ஆவது மாதத்தில்) இந்நடவடிக் கைகளின் தாக்கம்

| | மூலதனம் | பொறுப்பு | = | சொத்துக்கள் |
|---|---|---|---|---|
| (1) | | | | + 60 000<br>- 60 000 |
| (2) | - 60 000 | | | - 60 000 |
| (3) | - 10 000 | | = | - 10 000 |
| (4) | - 10 000 | + 50 000 | = | - 10 000<br>- 50 000 |
| (5) | - 10 000 | | = | - 10 000<br>+ 50 000<br>- 50 000 |

◆கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 5 ஆம் 6 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

NRS நிறுவனமானது 01.01.2006 இல் மோட்டார் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தது. இதன் பயன் உள்ள காலம் 5 வருடங்கள் ஆகவும் இழிவு பெறுமதி இல்லை எனவும் மதிப்பிடப்பட்டு நேர் கோட்டு முறையில் தேய்வு இடப்பட்டது. 31.12.2008 இல் மோட்டார் வாகன ஏட்டுப் பெறுமதி ரூ. 240 000 ஆகும். இவ்வாகனம் 30.06.2009 இல் மீள் மதிப்பிடப்பட்டது. மீள் மதிப்பீட்டு பெறுமதி மீது பெறுமானத் தேய்வு வீதம் வருடாந்தம் 30% ஆக பேணப்பட்டது அதற்கமைய 31.12.2009 இல்ஐந்தொகையில்மோட்டார்வாகன ஏட்டுப் பெறுமதி ரூ. 170 000 காட்டப்பட்டது.

(5)31.12.2009 இல் இலாபநட்ட கணக்கில் தாக்கல் செய்யப்பட்ட மோட்டார் வாகன தேய்வு

(1) ரூ. 90 000
(2) ரூ. 150 000
(3) ரூ. 120 000
(4) ரூ. 210 000
(5) மேற்கூறிய எதுவுமில்லை

(6) 30.06.2009 இல் மோட்டார் வாகன மீள் மதிப்பீட்டு இலாபம்

(1) ரூ. 40 000 (2) ரூ. 30 000
(3) ரூ. 20 000
(4) ரூ. 50 000 (5) ரூ. 60 000

(7)வருமான செலவொன்று மூலதன செலவாக பதியப்பட்ட வழு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் பின்வரும் விளைவுகள் தோன்றி இருக்கும்.

a.நடைமுறையல்லாச் சொத்து அதிகரித்தல் b.நடைமுறைச் சொத்து அதிகரித்தல் c.தேறிய சொத்தில் அதிகரிப்பு ஏற்படல் d.செயற்பாட்டு செலவில் அதிகரிப்பு ஏற்படல்
e.தொழிற்படு மூலதனத்தில் அதிகரிப்பு ஏற்படல்

மேற்கூறப்பட்டவற்றில் சரியானது.

(1) a யும் b யும் (2) a யும் d யும்
(3) b யும் c யும்
(4) a யும் c யும் (5) c யும் e யும்

(8) தொழிற்படு மூலதனத்தில் குறைவை ஏற்படுத்தும் ஊடு செயல்களில் சரியானது

a.நடைமுறையல்லாச் சொத்து கடனுக்கு விற்பனை செய்தல்.
b.நடைமுறையல்லாச் சொத்து கொள்வனவு செய்தல்.
c.வங்கிக்கடன் மீள செலுத்துதல்.
d.கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள்
e.கடன்பட்டோரிடம் காசு பெறப்படும் போது அனுமதிக்கப்பட்ட கழிவு

(1) b,c,d (2) b,c,e (3) a,c,d
(4) a,d,e (5) b,d,e

(9)2009 டிசம்பர் மாதத்திற்கான கம்பனியொன்றில் ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் தொழில் தருநரினாலும் ஊழியர்களாலும் பங்களிப்பு செய்யப்பட்ட ஊழியர் சேமலாப நிதி முறையே 15%, 10% ஆகும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பு 3% ஆகும். இம்மாதத்தில் மீட்புச் செய்யப்பட்ட சம்பள முற்பணத் தொகை ரூ. 6 000 ஆகும். இலாநட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்ட டிசம்பர் மாத ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு ரூ. 47 200 ஆகும் 2009 டிசம்பர் மாத ஊழியருக்குக் காசாகக் கொடுக்கப்பட்ட சம்பளம்.

(1) ரூ. 35 200 (2) ரூ. 30 000
(3) ரூ. 40 000
(4) ரூ. 31 200 (5) ரூ. 41 200

(10)வியாபாரமொன்று 2008 ஆம் ஆண்டு முடிவில் கணக்கு பதிவிலிடல் எழுந்த தவறு காரணமாக இறுதி இருப்பு ரூ 60 000 இனால் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இது 2009 ஆம் ஆண்டிலேயே கண்டு பிடிக்கப்பட்டது. இது 2009ஆம் ஆண்டிற்கான விற்பனைக் கிரயத்திலும் மூலதனத்திலும் எத்தகைய தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

(1)விற்பனைக் கிரயம் கூடதலாகவும் மூலதனத்தில் குறைவும்.
(2)விற்பனைக் கிரயம் குறைவாகவும் மூலதனத்தில் கூடுதலாகவும்.
(3)விற்பனைக் கிரயம் கூடுதலாகவும் மூலதன்த்தில் மாற்றமின்மையும்.
(4)விற்பனைக் கிரயம் மாற்றமின்மையும் மூலதனத்தில் மாற்றமின்மையும்
(5)விற்பனை கிரயம் குறைவாகவும் மூலதனத்தில் குறைவும்.

◆11 - 12 ஆம் வினாக்களுக்க விடைகாண்பதற்கு கீழுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.

2008.03.31 இல் தவறுகள் திருத்துவதற்கு முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு மீதி ரூ. 110 000 காணப்பட்ட நிலையில் தனி நபர் மீதிகளின் கூட்டுத்தொகை வேறு ஒரு மீதி காணப்பட்டது. இவ்வேறுபாடு பின்வரும் காரணங்கள் காரணமாக எழுந்தன.

1. கடந்த ஆண்டு பதிவழித்த அறவிடமுடியாக் கடன் ரூ. 6 000 கடன்பட்டவர் ஒருவர் மீள செலுத்தியிருந்தார். கடன்பட்டோர் பேரேட்டில் உள்ள நபர் கணக்கில் உரியவாறு பதியப்பட்ட போதிலும் பொதுப்பேரேட்டில் உள்ள கணக்கில் காசுப்பெறுவனவு மாத்திரம் செலவு வைத்தது தவிர வேறுபதிவு செய்யப்படவில்லை.
2. விற்பனைப் பேரேட்டில் உள்ள பட்டியல் தொகை ரூ. 6 900 முதன்மையேட்டில் ரூ. 9 600 என பதியப்பட்டு இருந்தது.
3. கடன்பட்டோர் மீதி ரூ. 3 000 தனிநபர் மீதிகளின் தொகுப்பில் பட்டியலில் செலவு மீதியாக எடுக்கப்பட்டது.

(11) 2008.03.31 இல் தவறு திருத்துவதற்கு முன் தனி நபர்களின் மீதி பட்டியலின் கூட்டுத்தொகை

(1) ரூ. 110 000 (2) ரூ. 113 000
(3) ரூ. 113 300
(4) ரூ. 116 300 (5) ரூ. 112 700

(12) 2008.03.31 இல் திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி

(1) ரூ. 112 700 (2) ரூ. 110 000
(3) ரூ. 113 300
(4) ரூ. 116 300 (5) ரூ. 113 000

(13) பின்வரும் தகவல்கள் பெரேரா வியாபாரத்துடன் தொடர்புடையதாகும்.

| | | |
|---|---|---|
| 31.12.2009 இல் மொத்தச் சொத்துக்கள் | ரூ; | 145 000 |
| 31.12.2009 இல் மொத்தப் பொறுப்புக்கள் | ரூ. | 55 000 |
| 31.12.2009 இல் மொத்த வருமானம் | ரூ. | 48 000 |
| 31.12.2009 இல் மொத்த செயற்பாட்டுச் செலவு | ரூ. | 25 000 |
| 31.12.2009 இல் தேறிய சொத்து அதிகரிப்பு | ரூ. | 65 000 |
| 2009 ஆம் ஆண்டில் மேலதிக மூலதனம் | ரூ. | 57 000 |

2009 ஆம் ஆண்டில் உரிமையாளரினால் மேற்கொள்ளப்பட்ட பற்றிய தொகை

(1) ரூ. 17 000 (2) ரூ. 9 000
(3) ரூ. 15 000
(4) ரூ. 18 000 (5) ரூ. 25 000

(14) 13ம் வினாவில் தரப்பட்ட தகவல்களின்படி 01.01.2009 இல் உரிமையாண்மை மீதி

(1) ரூ. 90 000 (2) ரூ. 33 000
(3) ரூ. 25 000
(4) ரூ. 35 000 (5) ரூ. 40 000

**♦ 15,16,17 ஆம் வினாக்களுக்கு விடை தருவதற்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

மாலா, பாலா, கேமா ஆகியோர் இலாபநட்டங்களை முறையே 4 : 3 : 3 எனும் விகிதத்தில் பகிர்கின்றனர். இப்பங்குடமையில் கேமா ஓய்வு பெறுகின்றார். ஏனையோர் தமது இலாப நட்டத்தை சமமாக பகிர்கின்றனர். புத்தகத்தில் பதியப்பட்ட நன்மதிப்பு ரூ. 30 000 ஆகும் மூலதனமீதிகள் முறையே மாலா ரூ. 100 000 மாலா ரூ. 60 000, கேமா ரூ. 40 000 ஆகும். ஓய்வுபெறும் பங்காளருக்கு செலுத்திய தொகை ரூ. 55 000 ஆகும். மூலதனத்தைவிட மேலதிகமாக செலுத்திய தொகை நன்மதிப்பு பங்காகும்

(15)புதிய பங்குடமையில் பங்காளர்களின் (உரிமை அதிகரிப்பு) சேர்ப்பு விகிதம்

(1) 1 : 1 (2)1 : 2
(3) 4 : 3
(4) 2 : 1 (5) 3 : 4

(16) கேமா ஓய்வு பெறும் தினத்தில் மதிப்பிடப்பட்ட பங்குடமையின் மொத்த நன்மதிப்பு பெறுமதி

(1) ரூ. 50 000 (2) ரூ. 30 000
(3) ரூ. 80 000
(4) ரூ. 15 000 (5) ரூ. 55 000

(17)நன்மதிப்பு பெறுமதி புத்தகத்தில் பேணப்படுவதில்லை எனின் நன்மதிப்பை பதிவதற்குரிய குறிப்பேட்டு பதிவு சரியானது.

| | | | |
|---|---|---|---|
| a. | மாலா மூலதன க/கு | வரவு ரூ. | 20 000 |
| | பாலா மூலதன க/கு | வரவு ரூ. | 25 000 |
| | கேமா மூலதன க/கு | செலவு ரூ. | 15 000 |
| | நன்மதிப்பு க/கு | செலவு ரூ. | 30 000 |
| b. | நன்மதிப்பு க/கு | வரவு ரூ. | 15 000 |
| | கேமா மூலதன க/கு | செலவு ரூ. | 15 000 |
| | மாலா மூலதன க/கு | வரவு ரூ. | 22 500 |
| | பாலா மூலதன க/கு | வரவு ரூ. | 22 500 |
| | நன்மதிப்பு க/கு | செலவு ரூ. | 45 000 |
| c. | மாலா மூலாதன க/கு | வரவு ரூ. | 22 500 |
| | பாலா மூலதன க/கு | வரவு ரூ. | 22 500 |
| | நன்மதிப்பு க/கு | செலவு ரூ. | 30 000 |
| | கேமா மூலதன க/கு | செலவு ரூ. | 15 000 |
| d. | நன்மதிப்பு க/கு | வரவு ரூ. | 50 000 |
| | மாலா மூலதன க/கு | செலவு ரூ. | 20 000 |
| | பாலா மூலாதன க/கு | செலவு ரூ. | 15 000 |
| | கேமா மூலதன க/கு | செலவு ரூ. | 15 000 |
| | மாலா மூலதன க/கு | வரவு ரூ. | 40,000 |
| | பாலா மூலதன க/கு | வரவு ரூ. | 40,000 |
| | நன்மதிப்பு க/கு | செலவு ரூ. | 80,000 |

(1) a யும் b யும் (2) a யும் c யும்
(3) b யும் c யும்
(4) c யும் d யும் (5) a யும் d யும்

**♦ 18, 19, 20ம் வினாக்களுக்கு விடை தருவதற்கு கீழே தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துக.**

டியூட்டி கம்பனி ஆடைத் தொழிற்சாலையாகும். கீழே தரப்பட்ட தகவல்கள் 2009 ஜனவரி மாதத்துடன் தொடர்பானது

| | | | |
|---|---|---|---|
| ஆடை ஒன்றுக்கு பயன்படுத்திய துணி | | 3 | மீற்றர் |
| கொள்வனவு செய்யப்பட்ட துணி | | 3000 | மீற்றர்கள் |
| இம்மாதம் மூலப்பொருள் இருப்பில் குறைவு | | 300 | மீற்றர்கள் |
| துணி வெட்டுனர் கூலி ஆடை ஒன்றுக்கு | ரூ. | 100 | |
| தையல் கூலி ஆடை ஒன்றுக்கு | ரூ. | 150 | |
| ஏனைய நேர்க் கிரயம் ஆடை ஒன்றுக்கு | ரூ. | 10 | |
| நடைமுறை வேலை இருப்பு அதிகரிப்பு | ரூ | 64 000 | |
| 1 மீற்றர் துணி கொள்வனவு விலை | ரூ. | 180 | |

நடைமுறை வேலை இருப்பில் மூலப்பொருளும் துணி வெட்டுனர் கூலி மாத்திரமே உள்ளடங்கி உள்ளது. அலகு ஒன்றுக்கான நேர்கிரயங்கள் யாவும் நிலையான பெறுமதியாகும்

(18) 2009 ஜனவரி மாதம் பயன்படுத்திய துணிகளின் கிரயம்

(1) ரூ. 540 000 (2) ரூ. 594 000
(3) ரூ. 486 000
(4) ரூ. 558 000 (5) ரூ. 548 000

(19)ஜனவரி மாத முடிவில் குறைவேலை இருப்பில் உள்ள ஆடைகள் எண்ணிக்கையும் உற்பத்தி செய்த ஆடைகள் எண்ணிக்கையும்.

(1) 300, 3 000 (2) 300, 3 000
(3) 100, 3 000
(4) 100, 1 000 (5) 100, 1 100

(20) 2009 ஜனவரி மாதத்திற்கான மூலக்கிரயம் யாது?

(1) ரூ. 740 000 (2) ரூ. 832 000
(3) ரூ. 800 000
(4) ரூ. 868 000 (5) ரூ. 820 000

**♦ 21 தொடக்கம் 30 வரை வினாக்களுக்கு சுருக்க விடை தருக.**

(21)நேர்க்கிரயம், நேரில் கிரயம் என்பவற்றுக்கிடையிலான இரண்டு வேறுபாடுகள் தருக.

(22)ஒரு சொத்து தொடர்பான பின்வரும் பிற்பட்ட செலவு காரணமாக சொத்தின் கிரயம் அதிகரிக்கும் அதிகரிக்காது எனக் காட்டுக.

அ.பொறி ஒன்றின் பயன்படு ஆயுட்காலம் நீடிப்பதற்கான மாற்றியமைத்தல் செலவு

ஆ.உற்பத்தி வெளியீட்டின் தரத்தினை உயர்த்துவதற்காக பொறியின் பாகங்களை தரமுயர்த்துதல்

| அதிகரிக்கும் | அதிகரிக்காது |
|---|---|
| | |

(23)இலாபநோக்கமற்ற நிறுவனத்தின் காசேட்டின் சுருக்கத்திற்கும் இலாப நோக்கமுடைய நிறுவனத்தின் காசேட்டிற்கும் இடையே பிரதான வேறுபாடு இரண்டு தருக.

(24)நடைமுறையல்லா பொறுப்பொன்றுக்கு இருக்கக் கூடிய இரண்டு பண்புகள் தருக.

(25)பின்வரும் உருப்படிகள் சொத்துக்கணக்கா, பொறுப்புக்கணக்கா, வருமான கணக்கா, செலவுக் கணக்கா எனக் காட்டுக.

ஊழியர் சேமலாப நிதி கணக்கு மீதி

ஊழியர்கட்கு வழங்கிய கடன் கணக்கு

விற்பனையில் உள்ளடங்கிய பெறுமதி கூட்டல் வரிக்கணக்கு

..........................................................................................

வெளித்திரும்பல் கணக்கு .

..........................................................................................

(26) காசேட்டினை முதன்மையேடாக கருதுவதற்கான இரண்டு காரணங்கள் தருக.

(27) பொருண்மை அல்லது முக்கிய அளவு என்றால் என்ன?

(28)இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் அனுமதிக் கட்டணம் தொடர்பாக மாற்று கணக்கீட்டு முறைகளைக் குறிப்பிடுக

(29) நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றிய கணக்கீட்டு கொள்கைகள் ஏன் வெளிப்படுத்தப்பட வேண்டும்?

(30) வருமானக் கூற்றுக்கும் ஐந்தொகைக்கும் இடையிலுள்ள தொடர்பு யாது?

**♦ 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்கு இடைவெளியில் வரவேண்டியவற்றைக் காட்டுக.**

(31)காசேட்டு வங்கி கொடுக்கல் வாங்கல் பதிவு ஆனது .......................... .............................................................. என்ற அடிப்படையிலும் வங்கிக் கூற்றுப் பதிவானது .............................................................. என்ற அடிப்படையிலும் பதிவு செய்யப்படுகிறது

(32)பங்குடமையில் பங்காளர் மூலதன கணக்கு ............................ .................. ........................ பேணப்படும் போது மாத்திரமே............................ .............................. பேணப்படுகின்றது.

(33)விளையாட்டுக் கழகமொன்றின் சந்தா தொடர்பான கொள்கை வருமதிகளுக்கு கணக்கு வைப்பதில்லை. 31.12.2008 இல் வருமான செலவுக்கு மாற்றீடு செய்த சந்தா 18 000 ஆகும். முற்பண சந்தா அதிகரிப்பு ரூ 3 000 01.01.2008 இல் முற்பண சந்தா ரூ. 1 200 ஆகும். கணக் காண்டில் கொள்ளல் கொடுத்தல் கணக்கில் வரவு வைத்த சந்தா

..........................................................................

(34)கீழே காட்டப்பட்டுள்ள கணக்குகளில் காணக்கூடியது வரவு மீதியா, செலவு மீதியா எனக் குறிப்பிடுக.

1. முற்பணமாக பெற்ற சந்தா கணக்கு .......................................
2. அறவிட முடியா சந்தா கணக்கு ........................................ ................................
3. கடன கொடுத்தோரால் விதித்த தண்டவட்டி கணக்கு ...................... ......................
4. கட்டட அபிவிருத்தி நிதிக் கணக்கு ...........................

(35)வணிக முயற்சி ஒன்றின் கொடுக்கல் வாங்கல்களின் இரட்டைப் பதிவை முற்றாக பக்கம் மாறிப் ................................ வழு ............................................ .............. எனப்படும்.

**♦ 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியா, பிழையா எனக் குறிப்பிடுக.**

(36)வியாபாரமொன்றின் கணக்காண்டின் இறுதி இருப்பு பெறுமதி குறைத்து மதிப்பிடப்பட்டிருபபின் விற்பனைக் கிரயம் குறைந்து காட்டப்படும். ( )

(37)முன் கொண்டு செல்லப்படும் தொகை எனப்படுவது (Carrging Amoung) ஒரு சொத்தின் கிரயத்தில் அவ் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு கழித்த பின்னர் பெறப்பட்ட தொகையாகும். ( )

(38)பங்குடமையொன்றில் பங்காளர்களின் பற்று மீதான வட்டி பங்காளர்களின் இறுதி இலாப பகிர்வை குறைவடையச் செய்யும். ( )

(39)கோவை (file) வாங்கிய செலவு பொருண்மை எண்ணக்கருவிற்கு அமைவாக வருமான செலவாக இனம் காணப்படுகின்றது. ( )

(40) வரவுத் தாள் ஒன்றில் காணப்பட்ட தொகையில் வரவுப் பதிவானது உட்திரும்பல் கணக்கில் இடம் பெறும் ( )

# ஆனி மாதப் பலன்கள்

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3,4 பாதங்கள் , திருவாதிரை ,புனர்பூசம்,1,2,3 பாதங்கள்)**

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்று சொல்லும் மிதுன இராசி நேயர்களே!

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது இராசி நாதன் புதன் மாதத் தொடக்கத்தில் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே ,விரயங்கள் கூடும். விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால் தான் சிக்கல்களில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும். தனாதிபதி தனஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வருமானம் திருப்தி தரும் என்றாலும் 5 , 12க்கு அதிபதியான சுக்கிரனும் இணைந்து மாதங்தொடங்குவதால் பிள்ளைகள் வழியிலும் பிற வழியிலும் செலவுகள் அதிகரிக்கும்.

குரு 10 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் மற்றும் உத்தியோகத்தில் மாற்றங்களைச் செய்யலாமா? எந்தத் துறையில் ஈடுபட்டால் எதிர்பார்த்தபடி இலாபம் கிடைக் கும் என்ற சிந்தனை மேலொங்கும். வெளி வட்டாரப் பழக்கவழக்கங்களில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. பிறருக்கு பொறுப் புக்கள் சொல்வதை தவிர்ப்பது நல்லது ஜென்மகேது ஆன்மீக நாட்டத்தை அதிகரிக்க வைக்கும்.

கோவில் திருப்பணிகளும் அன்னதானத்திலும் கூடுதல் கவனம் செலுத்துபவர்களுக்கு பாதிப்புக்கள் குறைய வழி உண்டு.

யூன் 16ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். ஜென்ம ராசியில் ராசி நாதன் சஞ்சரிக்கும்பொழுது உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு செயற்பட ஆரம்பிப்பீர்கள். புது முயற்சிகள் கைகூடும். பொருளாதாரம் எதிர்பார்த்ததைப் போல வந்து சேரும். விலகிச் சென்ற உடன் பிறப்புக்கள் விரும்பி வந்து சேருவர். எதிர்வரும் யூலை 2ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார்.. இதன் விளைவாக குடும்ப முன்னேற்றம் கூடும்.கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக நடைபெறும்.

இராசி நாதனாகவும் நான்காம் இடத்திற்கு அதிபதியாக விளங்கும் புதன் இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தாய் வழி ஆதரவு பெருகும். இடம் ,பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்.

5 ,12க்கு அதிபதியான சுக்கிரன் மூன்றில் சஞ்சரிக்கும்பொழுது உடன் பிறப்புக்களின் வழியில் ஒரு தொகையைச் செலவிடவேண்டிய சூழ்நிலை உருவாகும். அவர்களின் இல்லத்தில் நடைபெறும் சுப காரிய நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்தி வைப்பீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். அஞ்சல் வழியிலும் அனுகூலச் செய்திகள் வந்து சேரலாம். வங்கியில் அடகு வைத்த தங்க நகைகளை மீட்கும் சூழ்நிலை உருவாகும்.

யூலை 15ஆம் திகதி மீனத்தில் உள்ள குரு வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக கேந்திராதிபத்திய தோசம் பெற்ற கிரகம் யோகத்தையே வழங்கும். வக்கிரகுரு உங்களுக்கு வளர்ச்சியையே கொடுக்கலாம். எனவே எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இனிய சம்பவங்கள் மாதக் கடைசியில் நடைபெறும். வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாகும். வருமானமும் திருப்தி தரும்.

இல்லத்துப் பூசை அறையில் நின்ற கோலத்துடன் விஸ்ணு படத்தை வைத்து வழிபடுவதோடு ஓம் நமோ நாராயணாய நமக என்று 32 முறை புதன் கிழமை தோறும் எழுதி வரவும்.புதிய பாதை புலப்படும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம்,ஆயிலியம் )**

மற்றவர்கள் செய்ய முடியாது என்பதை செய்து காட்டும் கடக இராசி நேயர்களே!

யூன் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசி நாதன் சந்திரன் இராசியிலேயே சஞ்சரித்து குருவால் பார்க்கப்படுவதால் எடுத்த காரியங்கள் இனியே முடியும். இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து கொண்டே இருக்கும்.எதிரிகள் நண்பர்களாகி விடுவர். மதிப்பும் மரியாதையும் உயரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.எதை எதிர்பார்த்து காத்திருந்தீர்களோ அது உங்களுக்கு கிடைக்கப்போகிறது.

பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும் அவர்களின் முன்னேற்றம் கருதி ஒரு பெருந்தொகையை மனமுவந்து செலவிடுவீர்கள். உதாசீனப்படுத்திய உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து நடந்ததை மறந்து நடைபோடுவோம் என்று சொல்வர். நீங்களும் பெருந்தன்மையோடு நடந்து கொண்டு பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

தனாதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் ஆனி மாதத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்றே சொல்ல வேண்டும். இருப்பினும் குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் விரயத்திற்கு ஏற்ற வரவை கொடுத்துக்கொண்டே இருப்பார். பார்க்கும் குருவை பலப்படுத்த பரிகாரங்கள் செய்தால் வாழ்க்கை வளமாகும்.

யூன் 16ஆம் திகதி மிதுனராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் விரயாதிபதி வலுப்பெறுவதால் செலவுகள் இரு மடங்காகலாம். சிக்கனத்தை கையாள முடியாது. தொழிலில் அலைச்சலுக்கு ஏற்ற ஆதாயம் கிடைத்தாலும் மன நிம்மதி குறையும். யூலை 2ஆம் திகதி மேல் உடன் பிறப்புகள் வழியிலும் ஒரு தொகையைச் செலவிட நேரிடும். வழக்குகளில் வெற்றி கிட்டும். தொழிலுக்கு புதிய கூட்டாளிகள் வந்துசேருவர்.துணிவும் தன்னம்பிக்கையும் கூடும்.

யூலை 12ஆம் திகதி சிங்கராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். 4 ,11இக்கு அதிபதி தனஸ்தானத்தில் செவ்வாயுடன் கூடும் பொழுது சொத்துக்களை விரயமாக்குவார். சொத்துக்களால் இலாபத்தையும் கொடுப்பர்.

எனவே ஏதாவது ஒரு சொத்தை விற்பனை செய்ய நினைப்பவர்கள் இப்பொழுது நல்ல விலைக்கு விற்க வாய்ப்பு கைகூடி வரும். மாற்றுச் சொத்து ஒன்றை வாங்கி மகிழ்ச்சி 'அடைவர். வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். மாடி கட்டுவது மனையை விரிவாக்குவது என்று ஏதாவது ஒரு சுபச் செயலை செய்ய முன் வருவீர்கள்.

### சிவல்புரி சிங்காரம்

அதிசாரமான வந்த குரு உங்கள் இராசியை பார்க்கிறாரே என்று மகிழ்ச்சியோடு இருந்த உங்களுக்கு அதன் வக்ரகாலம் வளர்ச்சியில் தளர்ச்சியைக் கொடுக்கலாம். திடீர் உத்தியோக மாற்றம் ஊர் மாற்றங்களையும் உருவாக்கும். பொதுவாக 6 ,9க்கு அதிபதி வக்ரம் பெறுகிறார். எனவே தந்தை வழி உறவினர்களால் பகை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

இம்மாதம் பௌர்ணமி அன்று நிலவு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அபிராமி அம்மன் பதிகம் பாடி வழிபட்டால் நதி போல துயரம் விலகி ஓடும். நலம் யாவும் வந்து சேரும். (வளரும்)

# வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் கடைநிலையிலிருந்து மேற்கொள்ளவில்லை

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப்பெறவில்லை என கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் கடை நிலையில் இருந்து மேற்கொள்ளப்பட வில்லை என குறித்த தேர்தல் கண்காணிப்புக் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்திற்கு செல்லும் நபர்களுக்கு மட்டுமே வாக்காளர்களை பதியும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் வீடு வீடாகச் செல்லவில்லை எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக ஒரே கிராமத்தில் சிலருக்கு வாக்குரிமை இல்லாமல் போகக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் ஏனைய மாவட்டங்களில் வாக்காளர் பதிவு நடத்தப்படுவதற்கு வடக்கில் வாக்காளர் நடத்தப்படும் விதத்திற்கும் வித்தியாசம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் வாக்காளர் பதிவினை உரிய தரத்தில் பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கபே கோரிக்கை விடுத்துள்ளது.

(4-6)

# சுகாதார மருத்துவ,குடிநீர்,மலசலகூட வசதிகள் சீராக கிடைக்க ஆவன செய்யவும்

## மீள் குடியேறிய மக்கள் கோரிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வன்னியில் ஏனைய இடங்களிலும் மீள் குடியேறியோருக்கு மலசலகூட வசதிகள் , குடிநீர் வசதிகள் உட்பட்ட சுகாதார மருத்துவ வசதிகள் சீராகக் கிடைக்க ஆவன செய்யப்படவேண்டும் என மீள் குடியேறிய மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மாவட்டங்களில் உள்ள வீடுகள் யாவும் அழிந்து போயுள்ளதால் அனைவருக்கும் புதிய வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் எனவும் இவ்வாறான வீடுகள் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

விவசாய பிரதேசமான கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கும் ஏனைய பகுதி விவசாயிகளுக்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் , கிருமிநாசினி தெளி கருவிகள் , சிறிய ரக உழவு இயந்திரங்கள் ,சூடடிக்கும் இயந்திரம் உட்பட்ட ஏனைய விவசாய உபகரணங்களும் மானியமாக வழங்கப்பட வேண்டும் என அரசியல் கட்சிகள் சிலவற்றால் கேட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரை அண்மிய மருதநகர் மூன்றாம் வாய்க்கால் ,கரடிப்போக்கு , தென்னம்பிள்ளை பாமடி ,முரசுமோட்டை உருத்திரபுரம் பகுதி வயல்களில் மீளவும் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என மேலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சியில் உள்ள கிருஸ்ணன் கோவில் பகுதி மற்றும் பரவிப்பாஞ்சான் ஆகிய இடங்களில் இடம்பெயர்வின் போது வசித்த காணிகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவேண்டும் என அப் பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(6-4)

# ஏழாண்டுகளுக்குப் பின் ஜப்பான் விண்கலம் பூமிக்குத் திரும்பியது

(டோக்கியோ)

பூமியிலிருந்து 30 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சிறிய கிரகத்துக்கு அனுப்பப்பட்ட ஜப்பானின் ஹயபுசா விண்கலம் ஏழாண்டுகளுக்கு பின்னர் பூமிக்கு திரும்பியுள்ளது.

பூமியிலிருந்து 30 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் இட்டோகவா என்ற சிறிய கிரகம் உள்ளது. இந்த கிரகத்தை பற்றி ஆராய்ச்சி செய்ய **ஜப்பான் ஏரோஸ்பேஸ் எக்ஸ்புளோரேஷன் ஏஜென்சி** கடந்த 2003 ஆம் ஆண்டு மே மாதம் ஹயபுசா என்ற விண்கலத்தை அனுப்பியது.

இட்டோகவா கிரகத்தில் உள்ள மண்ணையும் கல்லையும் கொண்டு ஆராய்ச்சி செய்வதன் மூலம் சூரிய குடும்பம் தோன்றிய விதத்தை கண்டறிய முடியும் என ஜப்பானிய விஞ்ஞானிகள் நம்பினர். இக் கிரகத்திலிருந்து மண்ணையும் கல்லையும் சேகரித்துக் கொண்டு ஹயபுசா விண்கலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூமிக்கு திரும்பியது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரத்தருகே உள்ள ஊமரா என்ற இடத்தில் தரையிறங்கிய ஹயபுசா விண்கலம் இட்டோகவா கிரகத்திலிருந்து 18 கிலோ மண்ணை உலோக உறைக்குள் பாதுகாப்பாக வைத்து எடுத்து வந்துள்ளது.

ஹயபுசா கொண்டு வந்துள்ள இட்டோகவா ,கிரக மண் மாதிரி மூலம் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதன் மூலம் சில உண்மைகள் தெரிய வரும் என ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

(6-4)

# காரைநகர் சீனோர் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை

காரைநகர் சீனோர் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

சீனோர் தொழிற்சாலை சபை மீள இயக்குவது சம்பந்தமாக ஆராய்வதற்காக கடற்தொழில் அமைச்சர் மற்றும் கடற்தொழில் அமைச்சு பிரதிநிதிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் நேற்று முன்தினம் காரைநகருக்கு நேரடி விஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இக்குழுவினர் முற்றாக சேதம் அடைந்த சீனோர் தொழிற்சாலையை பார்வையிட்ட பின்னர் இதனை மீள இயக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

முதலில் படகுத் தொழிற்சாலையை ஆரம்பித்து, படிப்படியாக முழுமையாக இயக்க முடியும் எனவும் தெரிவித்த அமைச்சர் இதன் ஆரம்ப கால செயற்பாடுகள் தொடர்பாகவும் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

இச்சீனோர் தொழிற்சாலை மீளவும் ஆரம்பிக்கப்படுமானால் இது வடபகுதியில் பாரிய தொழிற்சாலையாக அமைப்பதுடன் சுமார் ஆயிரத்து ஐந்நூறு இளைஞர், யுவதிகளிற்கு வேலைவாய்ப்பு வழங்கவும் வழியேற்படும் என அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

(6-246)

# நவீன எண் ஜோதிடம்

12

இந்த இரண்டு என்னும் இலக்கத்திற் குரியது சந்திரன். மனம் ஐம்புலன் எனும் திரையில் விழும் ஒரு சினிமாச் சித் ாகும். காட்சி முடிவில் அத்தனையும் கனவுக் கதைகள். இத்தன்மையது மனம். மனம் என்றால் மனிதர் தம் கையை நெஞ்சின் மேற் சாற்றுவர். அது மனதின் வெறும் வெளித்திரை மட்டுமே. அந்தத் திரையின் நாற்புறமும் அதன் பின்னும் பஞ்ச பூத உணர்ச்சி உணர்வுகள் அதை வாங்கி பஞ்ச நடனம் ஆடுகிறது. அதனால் அது நெஞ்சில் நிழலாக விழுவதை மனம் என்று சொல்லுவர்.

ஆனால் மனதின் உற்பத்தியோ அறிவின் ஒரு சாயல் பகுதியே. அது ஆவல் தேடல், ஆசை காரணமாக உணர்வுகளுடன் கூடி இயங்கும் போது உடல் பூராக அதன் இரு சக்திகள் கொண்டு இயக்கப் படுகிறது. இயக்கப்படும் மின்சக்தியின் உற்பத்திச் சாலை மூளையின் ஒரு பின் புறமே. பின்புறச் செயல்கள் அத்தனையும் ஒதுக்கீடாக ஒன்று சேரும் ஒரு சேர்ப்பின் செயற்பாடே மனம். மூளையின் ஒரு பகுதியில் இருந்து இச் செயல்கள் புறப் பட்டாலும் அது மூளையின் பிரதானமான நடு மையப் புள்ளியோடு தொடர்பில்லாமல் விட்டு விலகியே தன் இயல்புகளை உடல் உணர்வுகளுக்குக் கொடுத்து செயற்படும் சக்தியின் சூக்ம பலத்தைத் தான் இந்தச் சந்திரன் மனநிலையாக நின்று செயற் படுகின்ற இயக்கத்தை நெஞ்சறை என் கிறோம். உண்மையில் அதன் தூண்டுதல் அங்கு இல்லை.

2 என்ற எண் இத்தன்மையது. சாந்தம், அகோரம்,அக்கிரமம்,தெளிவு ஆகிய நான்கு பருவங்களைக் கொண்டது.ஒன்றிலிருந்து மூன்று வரைக்கும் சந்திரன் தனது ஆட்சியின் பருவ மாற்றங்களை மாற்றுவது போன்று அதாவது வளர்பிறை, பூரண நிலவு, பூரண நிலவின் பின் தேய்பிறை, தேய்பிறையின் பின் அமாவாசை இந்த நான்கு மாற்றங்களாலும் பூமிக்கு பருவ காலங்களைக் கூட மாற்றிக் கொடுக்கும் சக்தி கொண்டது. அதே போன்று எண் கணக்கில் 31 நாள் இருக்கும் மாதக் கணக்கினுள் தொடர்பு எண்ணைக் குறிக்கும் தொகை உடைய எண்களைத் தரும் விடை கொண்ட எண்ணாக 4 என்ற எண் வரை அதே எண்கள் கூட்டித் தரும் விடை கொண்ட எண்களாகத் தரும் எண்களைக் கொண்ட தொகைகள் 4 என்ற எண்வரை வரும். இது சந்திரனின் செயற்பாட்டால் தான் ஆகின்றது. அதாவது1,10,19,28-2,11,20,29-3,12,21,30-4,13,22,31 இவை கூட்டி வரும் எண்களின் இறுதித் தொகை இதன் தொடர்பு எண்ணையே காட்டி நிற்கும்.ஆனால் 4 தடவை அந்த எண்களைக் காட்டி நிற்கும். அதன் பின் இறுதியாக நான்கு தொடக்கம் 9 வரையுள்ள எண்கள் கூட்டித் தரும் எண்களைக் கொண்டு அதே எண்களைத் தரும், விடைதரும் எண்களை 5இல் இருந்து 9 வரை மூன்று தடவைகளிற்கு மேல் காண முடியாது. 5,14,23 இதைப் போன்று 6,7,8,9 எண்களிற்கும் அதே எண்ணைக் கூட்டித் தரும் எண்கள் மூன்று தடவையே ஒரு மாதத்திற்குள் அடங்கும். இது இந்த முறை சந்திரனுடையதும் இராகுவினுடையதும் வல்லமையைப் பொறுத்தது அன்றி வேறு எந்தக் கருத்துக்களும் இந்தக் கணக்கில் அடங்காது.

ஆகவே சந்திரன் இறுதியாக 4 ஆவது எண்ணை ஆட்சி செய்ததோடு தன் ஆட்சியை முடித்துக் கொள்கிறது. ஐந்தில் இருந்து குருவே ஏனைய எண்களை ஆட்சி செய்கிறது. 5ஆம் எண் 9 எண்களின் நடு நிலைமை கொண்ட எண் ஆகும்.எண்கள் தொகுப்பில் 5 மத்தியஸ்தர் ஆகும்.இந்த 5இன் பின் தொடங்கும் எண்கள் வல்லமையும் இயக்க சக்தி கூடியவையாக இருப்பினும் அந்த எண்களைப் பிடித்து ஆட்சி செய்யும் கிரகங்களின் செயற்பாட்டுத் திறமையைப் பொறுத்தே அந்த எண்கள் நல்லன கெட்டன என்பதை கணிக்க முடியும்.

சந்திரன்-2.அது பெண்மையைக் காட்டி நிற்கின்றது. சந்திரன் தாயின் தராதரம். இந்தப் பாரின் உயிர் சகல அசையும்,அசைவற்ற இயக்கங்களின் முதுமைப் பாட்டியே சந்திரன். வளர்பிறை காலத்தில் அல்லது வளர்பிறைக் காலத்து அசையும், அசைவற்றனவுக்கும் ,மனிதர்களுக்கும் தேய்பிறை காலத்து அசையும், அசைவற்றனவுக்கும் ,மனிதர்களுக்கும் தன் காலத்து வளர்ச்சியின் போதும் தேய்வு

எண் ஜோதிட நிபுணர்
பேராசிரியர் ராஜராயேந்திரன்

காலத்தின் போதும் வித்தியாசப்பட்ட ஆக்கங்களையும் தாக்கங்களையும் கொடுத்து ஆட்சி செய்யத் தவறியதாக சந்திர ஆதிக்கத்தில் சரித்திரமே இல்லை.

அடுத்து பலத்தை செவ்வாய் ஆட்சி செய்கிறது. உடல் பலம்,ஆத்ம பலம், சூக்ம சக்தி பலம், தூய சக்தி பலம், அறிவுப் பலம்,பலவீனத்தின் பலத்தைக்கூட செவ்வாய் ஆட்சி செய்யும். செவ்வாய் என்ற எண் 9 ஐக் காட்டி நிற்கின்றது. 9 ஒரு போர் சிந்தனையாளர்.

## பெற்றோல் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

### ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ளபோதும் அரசாங்கம் பெற்றோலின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

இன்று முன்தினம் உலக சந்தையில் எண்ணெய்ப்பரல் ஒன்றின் விலை 69 டொலருக்கும் 72 டொலருக்கும் இடையில் விற்பனை செய்யப்படுவதாக கூறிய அவர் எமது துறைமுகத்துக்கும் ஒரு லீற்றர் பெற்றால் வந்து சேரும் போது அதன் விலை 52 ரூபாவாகுமென்றார்.

சொகுசு வாகனங்களின் வரியைக் குறைத்துள்ள அரசாங்கம் பெற்றோலின் விலையை ஏன் குறைக்கவில்லையென அவர் கேள்வியெழுப்பினார்.

நாட்டிற்குள் 52 ரூபாவுக்கு வரும் பெற்றோலை முச்சக்கர வண்டிச் சாரதிகளும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களும் வாகனச் சொந்தக்காரர்களும் 115 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதாகக் கயந்த கருணாதிலக கூறினார்.

(6-4)

## ஒட்டுசுட்டான் பகுதியில் மீள்குடியேற்றும் நடவடிக்கை

(கொழும்பு)

இடம்பெயர்ந்தவர்களுள் ஆயிரத்து 80 பேரை இவ்வாரம் ஒட்டுசுட்டான் பகுதியில் மீள் குடியமர்த்த திட்டமிட்டுள்ளதுடன் நேற்று முன்தினம் 93 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 300 பேர் தங்களது சொந்த இடங்களில் நேற்றுமுன்தினம் மீள் குடியமர்த்தப்பட்டனர் எனவும் வவுனியாவில் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த இவர்கள் விசேட பஸ்கள் மூலம் அழைத்து செல்லப்பட்டனர். எனவும் குறிப்பிடப்படுகிறது .

93 குடும்பங்களைச் சேர்ந்த 295 பேர் ஒலுமடு தட்சடம்பன் மற்றும் அம்பகாமம் ஆகிய பகுதிகளில் மீள் குடியேற்றப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 356 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 80 பேரை இந்த வாரம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 5 கிராம சேவகர் பிரிவுகளில் மீள் குடியேற்ற உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் நாளை மாங்குளம், பனிச்சங்குளம், அம்பகாமம், ஏ-9 வீதிக்கு மேற்கே இன்பபுரம், ஏ-9 வீதிக்கு மேற்கே திருமுருகண்டி ஆகிய பகுதிகளில் மீள் குடியேற்றப்படவுள்ளனர். (6-4)

## இடம்பெயர்ந்த மீனவர்களுக்கு இலகுகடன் வழங்கப்பட்டது

(கொழும்பு)


வடமாகாணத்தில் இடம்பெயர்ந்துள்ள மீனவர்களின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் 550 இலட்சம் ரூபாவை இலகு கடனாக வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் , கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மீனவர்களில் 70 பேருக்கு நேற்று முன்தினம் இந்த நிதி வழங்கப்பட்டதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இந்தப் பிரதேசங்களின் மீனவர்களின் நலனை கருத்திற் கொண்டு இலங்கை வங்கியின் ஊடாக இலகு கடன் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன யாழ். குருநகரில் நடைபெற்ற நிகழ்வின் போதே இந்த மீனவர்களுக்கான இலகுக் கடனை வழங்கி வைத்தார்.

தலா 50 ஆயிரம் ரூபா தொடக்கம் 4 இலட்சம் ரூபா வரையான தொகை அந்தந்த மீனவர்களின் தேவைக்கமைய வழங்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (6-4)



இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் அண்மையில் செல்வன் ஸ்ரீதரன் டிலுக்சனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த இசைக்கலைஞர் சங்கீத ரத்னா இளம் இசைத் தென்றல் நெடுமரம் சி.முத்தழகின் இசைநிகழ்வில் செல்வன் டிலுக்ஷன் மிருதங்கம் வாசிப்பதையும் தனது குருவான கிருபா அனந்தகோபனிடமிருந்து மிருதங்கம் பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். ( படங்கள்:-எஸ்.கதிரவேல்)

## அறிவித்தல்

2011ஆம் ஆண்டிற்கான இலவச பாடநூல்களுக்கான கோரல் புத்தகங்களை சகல பாடசாலைகளும் உடனடியாக தத்தம் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2011 ஆம் ஆண்டிற்குரிய இலவச பாடநூல்கள் இவ்வருடம் நவம்பர் மாத்திற்கு முன்னர் வடபகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் டபிள்யூ எம் என். ஜெ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (4-19)

## பிரி.நாடாளுமன்றில் நடத்தப்படும் விவாதத்திற்கு அரசு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றில் நடத்தப்படவுள்ள விவாதத்திற்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கைப் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் பிரிட்டனின் நாடாளுமன்றில் இன்று விவாதமொன்று நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களினால் விவாதம் நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ள போதிலும் இந்த விவாதங்களின் பின்னணியில் புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினரான சிங்காபேகன் மெக்டொனாவ் செயற்பட்டுவருவதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பின் கீழ் இலங்கையில் ஈழ இராச்சியம் உருவாக்கம் தொடர்பான கருத்துக் கணிப்பொன்று நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## மலேசியாவில் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள்

இலங்கையிலிருந்து மலேசியாவிற்கு தொழில் வாய்ப்புத் தேடிச் சென்ற நூற்றுக் கணக்கானவர்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தொகை பணம் செலுத்தி தொழில் நுட்ப வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மலேசியா சென்ற இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தங் களை பதிவு செய்து கொண்ட முகவர் நிறுவனங்களின் ஊடாகவே மலேசியா சென்றுள்ளனர்.

இது தொடர்பாக அரசாங்கமோ அல்லது முகவர் நிறுவனங்களோ நடவடிக்கை எடுக்கவில்லை என செய்தி ஊட்கம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட நபர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்க மலேசியாவிற்கான இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரியொருவர் தலா 54 ஆயிரம் ரூபாவினைகோரியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## அலங்கார உற்சவம்

(அல்வாய்)

புலோலி தென்மேற்கு ஒல்லையம்பதி வீரபத்திரர் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் தினமும் மாலை 6 மணிக்கு வசந்தமண்டப பூசையை தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.(4-19)

## மகேஸ்வரன் படுகொலை வழக்கு ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஐ.தே.க.பராளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட வழக்கு, உரிய சாட்சிகள் சமூகமளிக்காமையினால் எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போது, வழக்கில் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளோரில் இருவர் மட்டுமே நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதனால் மூன்று சாட்சிகளுக்கு பிடியாணை பிறப்பித்தநீதிபதிஏனைய சாட்சிகளுக்குஅழைப்பாணை அனுப்புமாறு பணித்து வழக்கு விசாரணையினை ஒத்தி வைத்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அரசாங்கத் தரப்பில் ஆஜரான அரச சட்டவாதி குமாரரட்ணம் வழக்கில் முதலாவது சாட்சியான பொலிஸ் கான்ஸ்டபிள் தர்மசிறி பெரேரா அமைச்சரவை பாதுகாப்புப்பிரிவில் கடமையாற்றுவதால் இன்று சமூகமளிக்கவில்லை என்றும் இதனை அடுத்து ஏனைய சாட்சிகள் அழைக்கப்பட்ட போது நித்தியானந்தன் மற்றும் கணேசபிள்ளை சோதிலிங்கம் ஆகிய இருவர் மட்டுமே நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன் போது கருத்துத்தெரிவித்த நீதிபதி ,வழக்கு விசாரணை நடைபெறுவதாக ஊடகங்களில் செய்தி வருகின்றன. ஆனால் இன்னமும் வழக்கு விசாரணை உரிய வகையில் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் சாட்சிகள் உரிய வகையில் நீதிமன்றில் ஆஜராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.இது வழக்கு விசாரணையின் தாமதத்தையும் நீதிமன்றத்தை அபகீர்த்திக்கு உட்படுத்தும் செயலாகும்.

எனவே அடுத்த தவணையில் சகல சாட்சிகளும் நீதிமன்றில் ஆஜராக்கப்படவேண்டும் என்று உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணையின் போது எதிரியானஜோன்ஸ்டன்கொலின்வெலன்டென் சிறைக்காவலர்களால் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கில் சாட்சிகளாக தர்மசிறி பெரேரா ,நித்தியானந்தன் ,உபுல் குமாரசில்வா ,யூ.பி.சுசந்த கணேசபிள்ளை சோதிலிங்கம் ,சசிகுமார் , தியாகராஜா பரமேஸ்வரன், தியாகராஜா துவாரகேஸ்வரன் உட்பட 13பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணையின் போது பாதிக்கப்பட்டோரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எல்.எம் அமீனின் சார்பில் சட்டத்தரணி கே.ஜி. ஜோனும் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஜெயக்குமாரும் ஆஜராகி இருந்தனர். (6-4)


மகத்துவமான கல்விக்கு தனித்துவமான பயிற்சி நிலையம்




பாரம்பரியத்துடன் கூடிய புதிய தலைமுறைக்கான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக்கல்வி

இன்று 16.06.2010 புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரையான சுபவேளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர். K. தேவராஜா அவர்களினால் சாவகச்சேரி கிளை கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திறப்புவிழா சிறப்புச்சலுகை
அனைத்து பாடநெறிகளுக்கும்
40% - 60% கட்டணக்கழிவு

CSC-ASIAN
COMPUTER EDUCATION
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி
(பிரதேச செயலகத்திற்கு முன்பாக)
Tel : 021-3213390


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று ஐந்தாம் திருவிழா

### உன் பாதமேதுணை

கேட்ட தெல்லாம் நயினையில் உறை
நாகபூசணியம்மா நல்கினாய்,உன் அருளால்
கெட்டதெல்லாம் அகன்று இப்பூமியில்
நாம் நல்வாழ்வு வாழ எண்ணியது,
தொட்டதெல்லாம் துலங்க வைப்பாய் மணிபல்லவ
தாயே,கலியுகத்தின் இராவணாதிகளால்
பட்ட தெல்லாம் போதும் நாகாச்சி தாயே
உன்பாதமே துணையென்று நம்பி வந்தோம்.

க.தெய்வேந்திரன்
எழுதுமட்டுவாழ்

---

### தோஷபயம் நீக்கிடம்மா

பல்லவி

உலகமெல்லாம் புகழ் பூத்த உத்தமித்தாயே– உந்தன்
திருவடியை அனுதினமும் தொழுதிடுவோம் நாமே

அனுபல்லவி

நாக சர்ப்ப தோஷமெல்லாம் நீக்கிடும் பேறுடைய – எங்கள்
நாகபூசணித்தாயே காத்திடுவாய் எம்மை

சரணம்

அலைகடலின் ஓசையுடன் குளிர்ந்த தென்றல் வீச
அருள்நிறைந்து அமர்ந்திருக்கும் அன்னையே சரணம்
காலமெல்லாம் நினது புகழ்பாடி நிதம் மகிழ்வோம்
கருணைக் கண்ணால் நோக்கியெம்மை காத்தருள்வாய்–தாயே

திருமதி.திருமகள் பொன்னம்பலம்
ஆறுகால் மடம்

---

### அதிகாரத் தீர்வைப் பெற அருளுமம்மா

வேப்பிலைக் காரிகையாம் வேதங்களின் தலைவியே
வேண்டுவோர் வரங்களை விநயமாகத் தருபவளே
நாகத்தின் நிழலில் நயந்துறையும் எழில் நாயகியே
நயினையில் கோயில் கொண்டமை ஆளும் நாகம்மாவே

அலைகடல் நடுவே வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்பியையே
அமுதசுரபியாய் அன்னமும் அருளும் வாரி வழங்கும் அபிராமியே
ஆண்டாண்டுகாலம் தீர்வின்றித் திண்டாடும் ஈழத் தமிழருக்கு
ஆத்தாளே அதிகாரத் தீர்வு பெற விரைந்து அருளுமம்மா தாயே

மட்டுவில் .சிவம்

---

### உற்றதுணை நீயே

அற்புதங்கள் காட்டி அருள் முகமும் காட்டி
பொற்புறக் கோயில் கொண்ட நயினையின் நாயகியே.
சுற்றிநிற்கும் கடலுன்னை சுகமாகத் தாலாட்ட
பற்றி நிற்கும் பாம்பினைப் பாயாகக் கொண்டவளே
உற்றவரின் உயிர்காக்கும் அன்னை நாகபூசணியே
ஒற்றை மருப்பானின் உவப்பான அன்னை நீயும்
பெற்றதுணையாயிருந்து எமதுயிர் காத்திடுவாய்
நற்கதிக்கு உன்னையன்றி வேறு கதி எமக்கேது.

பத்மகிரி-புலோலி.


ரூபா பன்முக வர்த்தகம்
இல. 104A , ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2479



### முகத்தை புதுசாக்கலாம்!

முகமாற்று அறுவை சிகிச்சை பல நாடுகளில் ஏற்கனவே அறிமுகமாகி விட்ட மருத்துவம். முகத்தில் ஏதாவது ஒரு இடத்தில் ஏற்படும் பாதிப்புகளை மட்டுமே இதுவரை இந்த சிகிச்சையில் செய்துள்ளனர். ஸ்பெயினில் முதல்முறையாக முகம் முழுவதையுமே மாற்றி சிகிச்சை அளித்துள்ளனர் மருத்துவர்கள். விபத்தில் மூக்கு, தாடை, நெற்றி, கண்கள், பற்கள் என எல்லா பாகத்தையும் இழந்த விவசாயி ஒருவருக்கு பார்சிலோனாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் புதிய முகத்தை அளித்துள்ளனர்.ஒவ்வொரு பாகத்தையும் வரைப்படம் வரைந்து சிகிச்சை அளிக்கப்பட்டது .இதுவே முதல் முறை என்பது ஹைலைட்!



### எகிப்தில் ரோம்!

இது சிலை இல்லை. ஒரு பெண்ணின் மம்மி. எகிப்து தலைநகர் கெய்ரோ அருகே உள்ள பஹாரியா பாலைவனத்தில் இந்தப் பெண்ணின் கல்லறைய்ய சமீபத்தில் கண்டனர். இக் கல்லறை கி.மு.31 நூற்றாண்டைச் சேர்ந்தது என்று முடிவுக்கு வந்துள்ளனர். தொல்பொருள் ஆய்வாளர்கள்.

மம்மியின் உயரம் மிகக் குறைவாகவுள்ளதால் இது எகிப்தில் ஆட்சி செய்த ரோமானியப் பெண்ணின் மம்மியாக இருக்கக்கூடும் என்றும் கணித்துள்ளனர்.




### நோயைச் சொல்லும் கருவி

இந்தக் கருவியின் பெயர் 454 லைஃப் சயின்ஸ் ஸீக் வென் சிங். இதை அமெரிக்காவில் உள்ள மேரிலாண்ட் கிரேக் வென்டர் நிறுவனத்தில் அமைத்துள்ளனர். இந்தக் கருவியில் ஒருவருடைய டி.என்.ஏ. சோதனை முடிபுகளை பதிவு செய்தால் போதும். புற்றுநோய் ,நீரிழிவு அல்லது இதயக் கோளாறு வருமா என்பதை எளிதில் கண்டுபிடித்துச் சொல்லிவிடும். மருத்துவத் துறையில் இக்கருவி மிகப்பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்கிறனர் அமெரிக்க மருத்துவர்கள்.

## டிஸ்கவரி லேட்டஸ்ட்

### குதிரைக்கு சிலை!

ஜேர்மனியில் உள்ள வெஸ்பேடன் நகரில் பழமையான குதிரை சிலையின் தலைப்பாகத்தைக் கண்டெடுத்துள்ளனர். அதை ஆராய்ச்சி செய்ததில் பல நூற்றாண்டு களுக்கு முன் வாழ்ந்த ரோமானியப் பேரரசர் அகஸ்டஸ் சிலையைத் தாங்கி நின்ற குதிரையின் சிலை இது என்பதைக்கண்டுபிடித்துள்ளனர். பழங்கால வெஸ்பேடன் நகரைத் தேடும் பணியில் ஈடுபட்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் தேடுதல் வேட்டையில் கிடைத்தது இந்தக் குதிரை சிலை.



# உலகைச் சுற்றி


AROUND THE WORLD

ஆர்.யூ.பாலமுருகன்

## ஆவணம்

### அட...மோனோ!


மோனோ ரயில் எப்படி இயங்குகிறது? இரண்டு தண்டவாளங்கள் மீது ஓடும் ரயில் போல இதன் இயக்கம் இருக்காது. ஒரே ஒரு தண்டவாளத்தில் மட்டுமே மோனோ ரயில் ஓடும். அதாவது அந்தரத்தில் தண்டவாளத்தில் தொங்கிக் கொண்டும் சுரங்கப் பாதையில் ஒற்றை தண்டவாளத்தில் செல்வதாகவும் இருவகை உண்டு. மின்சாரத்தில் இயங்குவதால் சுற்றுச் சூழல் மாசு இதில் இல்லை. 1964 ஆம் ஆண்டு ஜப்பானில் முதன் முதலாக மோனோ ரயில் ஓடியது. இப்போது ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா, மலேசியா, அவுஸ்திரேலியா உட்பட 60 க்கும் மேற்பட்ட நாடுகளில் ஓடிக்கொண்டிருக்கிறது மோனோ.


மோனோ ரயில்


ஸ்டோன்ஹெஞ்ச்

## புரியாத புதிர்!


பிரமிட்


காஸ்ட்லெரிக் ஸ்டோன்


செனோட்

உலகில் மர்மங்கள் நிறைந்த இடங்களுக்கு அளவே இல்லை. சில இடங்கள் எதற்காக,ஏன் உருவாக்கப்பட்டன என்ற தகவல்களும் இல்லை. உலகில் எப்படி எத்தனையோ இடங்கள் உள்ளன. இவற்றில் சில.... பிரமிட் ஒவ் கிசா எகிப்தின் பாரம்பரிய சின்னம். ஏழு அதிசயங்களில் ஒன்று. கிரேட் பிர மிட் ஆஃப் குஃபு, தி.பிரமிட் ஒப் கப்ரே மற்றும் தி பிரமிட் ஒப் மென் கவ்ரா என மூன்று பிரமிட்கள் சேர் ந்ததுதான் பிரமிட் ஒப் கிசா.

3800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இது உலகிலேயே மனிதன் உருவாக்கிய மிக உயரமான கட் டடம். இதில் ராணி அறை, ராஜா அறை மற்றும் கீழ் மட்டத்தில் ஒரு அறை உள்ளன. இரண்டு வழிபாட் டுத் தலங்களும் உள்ளன. இத் தலங்கள் ஏன் அமைக்கப்பட்டன என்ற கேள்விக்கு விடை தெரிய வில்லை.

வரலாற்றில் முக்கியமான நினைவுச் சின்னங்களில் ஒன்று ஸ்டோன்ஹென்ஞ். இங்கிலாந்தில் வில்ட்ஷயர் என்ற இடத்தில் உள்ளது.

5ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வட்ட வடிவில் கற்களை இங்கு அமைத்துள்ளனர். கி.மு. 2500இல் இக்கற்கள் அமைக்கப்பட்டிருக் கலாம் என்கின்றனர் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்.கி.மு.3ஆயிரத்தில் இந்த இடம் கல்லறையாக இருந் திருக்கலாம் என்று கூறுகின்றனர். ஆனால் இதுவரை அங்கு ஒரு சிறு துண்டு எலும்புகூட கிடைத்ததில்லை. மர்மம் நிறைந்த இந்த இடம் இப்போது சுற்றுலாத்தலம்!

காஸ்ட்லெரிக் ஸ்டோன் சேர்க்கிள். இதுவும் வரலாற்றுச் சின்னமே. இங்கிலாந்தில் உள்ளது. 38 கற்கள் இங்கு வட்டமாக நிறுவப்பட்டுள்ளன.

இவை கி.மு.3200இல் நிறுவப்பட்டிருக்கலாம் என்று கணித்திருக்கின்றனர் தொல் பொருள் ஆய்வாளர்கள். இந்த கற்களும் ஏன் அமைக்கப்பட்டன என்ப தற்கு இது வரை காரணம் தேடிக் கொண்டிருக்கின்றனர் தொல் பொருள் ஆய்வாளர்கள். மெக்சிக் கோவில் உள்ள காட்டில் செனோட் என்ற ஒரு சுரங்கம் உள்ளது. இத னுள்ளே சென்றால் குளமும் சிவப்பு நிற சுண்ணாம்புப் பாறைகளும் இருக்கின்றன. குளத்தின் ஒரு பகுதியில் மனித எலும்புக் கூடுகள் மலைபோல குவிந்து கிடக்கின்றன. மயன் இனத்தைச் சேர்ந்த மக்கள் இங்கு வாழ்ந்ததாக வும் மனிதர்களை நரபலி கொடுக்கவே செனொட் சுரங் கத்தை ஏற்படுத்திய தாகவும் தகவல்கள் உலவு கின்றன. ஆனால் காரணம் என்னவோ இதுவரை கிடைத்தபாடில்லை.

சுயநலம் என்ற நெருப்பானது – முதலில் மற்றவர்களைப் புசிக்கிறது; பின்னர் தன்னையே புசிக்கிறது – *ரஷ்யா*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டம்

## தமிழ்த்தேசப் பொதுவுடமைக் கட்சி அறிவிப்பு

இந்திய – இலங்கை அரசுகள் புதிதாக சைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களை கண்டித்து தமிழகமெங்கும் நாளை மறுதினம் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, ஈழத் தமிழர்களுக்கெதிரான ஐந்தாம் கட்டப்போரை இலங்கையும் இந்தியாவும் புதிய முறையில் ஆரம்பித்துள்ளன என்பதற்கான அடையாளம் தான் மன்மோகன்சிங்–ராஜபக்ஷ உடன்பாடுகள் கடந்த 08.06.2010 அன்று புதுடில்லியில் சிவப்புக் கம்பளம் விரித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வரவேற்ற இந்தியா 09.06.2010 அன்று இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் ஈழத்தமிழர் தாயகத்தைப் பறிப்பதையும் ஈழத்தமிழ் இனத்தைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கி விரட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்தியாவும் இலங்கையும் போர்படைகளைப் பரிமாற்றிக் கொள்ளவும் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா உயர்தரப் பயிற்சி அளிக்கவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தில் புதிதாக சேர்க்கப்படும் ஆட்களுக்கு இந்தியாவில் உயர்தரப்பயிற்சி அளிக்கப்படுமென்றும் இந்தியா தனது செயற்கைக்கோள் தகவல் மையத்தை இலங்கையில் நிறுவுவதோடு பலாலி விமானப் படைத்தளத்தை மேலும் வலுப்படுத்தித் தர இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.

இவ்வாறான போர் ஆயத்தங்கள் எந்தப் பகை நாட்டிற்கு எதிராக? இலங்கையும் இந்தியாவும் ஈழத்தமிழர்களைத்தாம் ஒரே பகை சக்தியாகக் கருதுகின்றனர் என்றும்,

இந்தியா தனது துணைத் தூதரகங்களை யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் திறக்க உடன்பாடு செய்துள்ளது. தமிழர் தாயகப் பகுதிகளில் தூதரகப் பெயரில் படைசார் உளவுப் பிரிவுகளை நிறுத்துவது தன் இந்தியாவின் நோக்கம்.

வடக்கில் வசந்தம் என்ற பெயரில் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து சிங்களவர் வேளாண்பண்ணைகள் அமைக்கும் திட்டத்தை இந்தியா ஏற்கனவே இலங்கைக்கு வழங்கியுள்ளது. அதற்கான ஒப்பந்தம் இப்போது கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு மின்சாரம் தர இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் நெய்வேலி மின்சாரத்தை இலங்கைக்கு அனுப்பக்கூடிய ஆபத்து உள்ளதாகவும் பண்பாட்டுப்பரிமாற்றம் என்ற பெயரில் சிங்களப் பண்பாட்டையும் புத்த மதத்தையும் ஈழத்தில் திணிப்பதும் சிங்களக் குடியேற்றங்களை அங்கு அதிகப்படுத்துவதும் தான் நடக்கும்.

எனவே இந்திய அரசும் இலங்கை அரசும் போட்டுள்ள ஒப்பந்தங்கள் ஒவ்வொரு தமிழரையும் இராணுவக் கண்காணிப்பின் கீழ் வைத்து உரிமைக்கு குரல் கொடுப்போரை நசுக்கவே பயன்படும்.

இந்த ஒப்பந்தங்களை நீக்க வலியுறுத்தி தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக் கப்படும். (6-4)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சட்டம் முன்னிற்க வேண்டும்

யாழ். குடாநாட்டில் இப்போது டெங்கு நோய் கோலோச்சுகின்றது.

யுத்தம் மட்டுமன்றி தொற்றுநோய்களும் தொற்றாத்தன்மையுள்ள நோய்களும் காலத்திற்குக் காலம் எங்களை ஆட்படுத்த படையெடுப்பு நடத்துகின்றன.

சிக்கின்குனியா எங்களிடம் இருந்த முதியவர்களில் பெரும்பாலானவர்களை தன் பசிக்கு இரையாக்கிக் கொண்டது.

ஏ–9 வீதி மூடப்பட்டு யாழ். குடாநாட்டு மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் இருந்த வேளை, சிக்கின்குனியாவின் படையெடுப்பு நடந்தேறியது.

இதேகாலப்பகுதியில் மலேரியாவும் குறுநில ஆட்சிக்குரிய மன்னன் போல நடந்து கொண்டது. இப்போது டெங்குநோய் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் குத்தகைக்கு எடுத்து தாண்டவம் ஆடத் தலைப்பட்டுள்ளது.

இந்நோயின் கொடூரத்திற்குப் பலியாகிப் போன சின்னஞ்சிறுசுகளின் இழப்பு இன்னமும் எங்கள் நெஞ்சங்களை நெருடிக் கொண்டிருக்கும் வேளை,

டெங்கின் தாக்கம் மீண்டும் தலைவிரித்தாடும் செய்தி திணுக்குற வைப்பதாகும். டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் உற்பத்தி இடங்கள் பற்றிய அறிவுகள் மக்களுக்குத் தெரிந்திருந்தாலும், அவர்களிடம் “மனமாற்றம்” ஏற்படாததன் விளைவுதான் மீண்டும் இந்த நோயின் தாக்கத்தை நாம் எதிர் கொள்ள வேண்டிய தாயிற்று.

பொறுப்பற்ற தன்மைகளும், நாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையும், பிறர்க்காகவும் வாழவேண்டும் என்ற பண்பின்மையும் எங்களை வருத்தவே செய்யும் .

இதிலிருந்து விடுபடுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். கடந்த முப்பது ஆண்டுகால யுத்தம் எங்கள் மனங்களை கொந்திவிட்டது. அந்த கொந்தல்களை உடனடியாக செம்மை செய்வதென்பது நடைமுறைச் சாத்தியமாகா.

அதேநேரம் மனங்களில் ஏற்பட்ட கொந்தல்களை சீராக் குவதில் ஆன்மீகத்தின் பங்களிப்பும் அறிவியலின் முன்னெடுப்பும் பண்பாட்டு விழுமியங்களின் பரப்புரைகளும் தேவையானவை.

இவற்றை முன்னெடுக்கும் அதேசமயம் சட்டமும் தன்பணியை செய்தாக வேண்டும். வீதிகளில் குப்பை கொட்டுவோரை, வீடுகளில்–காணிகளில் பற்றைக்காடு வளர்ப்போரை சட்டத்தால் திருத்தும் நடவடிக்கை எடுக்கப்படுவது கட்டாயமானதாகும்.

எனினும் சட்ட நடவடிக்கை எடுப்பதில் உள்ளுராட்சி அமைப்புகளும் சுகாதாரப் பிரிவுகளும் பின்னடிக்கின்றன. இந்தப் பின்னடிப்புக்கள் தான் டெங்குநோய் உள்ளிட்ட தொற்று நோய்களின் பரவலுக்கும்,

அதனால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கும் காரணமாகும்.

எனவே பொறுப்பற்றவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியம்.

சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் டெங்கு நோயை சடுதியாக கட்டுப்படுத்த முடியும். எங்கே பார்க்கலாம்.

## திறந்த தொலைக்கல்வி சுவரொட்டிப் போட்டி

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 30வது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் யாழ் பிராந்திய நிலையத்தில் கொண்டாடப்படவுள்ள திறந்த பல்கலைக்கழக தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே திறந்த தொலைக்கல்வி(Open Distance Learning) என்னும் தொனிப்பொருளில் சுவரொட்டிப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் ஏ3 சித்திரத் தாளில் சுவரொட்டியைத் தயாரித்து தமது பாடசாலை அதிபரிடம் உறுதிப்படுத்தி, தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம், யாழ் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ தபாலிலோ அனுப்பி வைக்குமாறு திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## மரபுரிமைத் தலங்களில் கட்டடம் அமைக்க அனுமதி தேவை

(கொழும்பு)

உலக மரபுரிமை மிக்க இடங்களாகப் பிரகடனப் படுத்தப் பட்ட இடங்களில் எதிர்காலத்தில் அனுமதியின்றின் கட்டடங்களை நிர்மாணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இடங்களில் ஏதேனும் கட்டட நிர்மாணங்கள் மேற் கொள்ளப்படுமாயின் இது குறித்துப் பூரண அனுமதி பெறப் பட வேண்டுமெனத் தேசிய மரபுரிமைகள் கலாசார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குறிப்பிட்டார்.

இதில் அனுராதபுரம் புனித நகரம், பொலனறுவ புனித நகரம் , புராதன சிகிரியா நகரம் , தம்புள்ள தங்க நகரம் , புனித கண்டி நகரம், வரலாற்றுச் சிறப்புமிக்க காலி நகரம், பல கொட்டுவ மற்றும் சிங்கராஜ வனம் ஆகியன உலக மரபுரிமை மிக்க இடங்களாகப் பெயரிடப்பட்டுள்ளன. (6-4)

## பாம்புக்கடியால் ஏற்படும் மரணங்களை தடுக்க நடவடிக்கை

விஷப்பாம்புகள் கடிப்பதனால் மரணங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் தேசிய திட்டமொன்றைச் செயற்படுத்த சுகாதார அமைச்சும் மட்டுப்படுத்தப்பட்ட சூழல் மன்றமும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் பொது மக்களை அறிவுறுத்தும் கருத்தரங்குகளை நாடு முழுவதிலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வருடமொன்றுக்கு 60 ஆயிரம் பேர் பாம்புக்கடிக்குள்ளாகின்றனர் என்றும், அவர்களில் 20 ஆயிரம் பேர் மட்டுமே சிகிச்சைக்காக மருத்துவமனைகளை நாடி வருகின்றனர் என்றும், பேராதெனிய வைத்திய பீடத்தின் பேராசிரியர் எஸ். ஏ.எச்.குலரத்ன கருத்தரங்கொன்றில் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது வருடமொன்றுக்கு 100பேர் இலங்கையில் பாம்புக்கடியினால் உயிரிழக்கின்றனர். பாம்புக்கடிக்குள்ளானோரை உடனடியாக அரசாங்க மருத்துவமனையில் சேர்ப்பதன்மூலம் இந்த எண்ணிக்கையை மேலும் குறைக்க முடியும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (6)

## கற்புலத்து மனோன்மணியே

கற்புலத்து நந்தாவினிலே
கோயில் கொண்ட மனோன்மணியே!
அற்புதங்கள் பல புரிந்தெம்மை
ஆண்டருளும் நாயகியே!
சிற்பமிகு ஓவியங்களுடன்
சீர்மேவ வீற்றிருந்து
முற்தவத்தின் பெறுபேறாய்
முன்வந்து அருளுகின்றாய்
உற்றவினை தீர்த்தருளும்
உமா மகேஸ்வரி நீயே!
பொற்பதங்கள் நாம் பணிந்தோம்
பூமகளே காத்திடம்மா
பெற்றவள் நீ எமை மறந்தால்
பேணுதற்கினி யார் வருவார்
உற்றவினை தீரவில்லை
உன்னையே நம்புகிறோம்

விகடகவி
மூ.திருநாவுக்கரசு

இன்று கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் கொடியேற்றம்

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மனிதன்



நட்சத்திரங்களையும் கிரகங்களையும் அடக்கி ஆளும் விதிகளை அறிவது பெருமையும் நன்மையும் தான். ஆனால் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் மன வலிமையையும் அடக்கியாளும் விதிகளை அறிவது அளவற்ற சிறப்புடையது. அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனால் ஆசைகளுக்கும் கோபத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால் உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை அவனால் உணரமுடியாது.



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு ஆளுநரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சிரமதானப்பணிகளில் சகல பாடசாலைகளுக்குமான சிரமதானப்பணிகள் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் அருகில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா, வடமாகாண கல்விப்பணிப்பாளர் வி. இராசையா ஆகியோர் நிற்பதையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மற்றும் மாணவர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்.)

# கிளிநொச்சி அறிவியல்நகர் மக்களை விரைவில் மீளக்குடியேற்றக்கோரிக்கை

(வேலணை)

கிளிநொச்சி அறிவியல் நகரானது முல்லைத்தீவு மாவட்ட எல்லைப்பகுதி கிராமமாகவும் ஏ9 பாதைக்கு கிழக்காகவும் திருமுருகண்டிக்கு வடக்காகவும் உள்ள ஒரு இடமாகும். கடந்த காலங்களில் இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பலருக்கு அரச அதிகாரிகளின் வழிகாட்டலுடனும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு குடியேற்றப்பட்டனர். சிலருக்கு காணிகளுக்குரிய அரச அனுமதிப்பத்திரங்கள் கூட கிடைத்துள்ளன.

இதனால் இக் கிராமத்தை அறிவியல் நகர் எனபெயர்மாற்றம்செய்து பெரியபெயர்ப்பலகை ஒன்று வீதிக்கு அண்மையில் அமைக்கப்பட்டு காணப்பட்டது.

2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் இப்பகுதியில் போர் உக்கிரம் அடைந்த போது தமது உடமைகளை கூட விட்டுவிட்டு இப்பகுதி மக்கள் கிளிநொச்சிக்கும் பின்பு வன்னி கிழக்கு பகுதிக்கும் இடம் பெயர்ந்து இறுதியில் செட்டிக்குளம் நலன்புரி கிராமங்களிலும் தற்போது வசித்து வருகின்றனர்.

இக்கிராமத்தின் அயற்கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இருந்தும் தமக்கு சுமார் 3 மாதத்திற்கு முன்பு மீளக்குடியேற்றுவதாக அரச அதிகாரிகள் கூறியதாகவும் ஆனால் இன்று வரைக்கும் மீள்குடியேற்றத்துக்கு அரச படையினர் அனுமதிக்கவில்லை என கூறப்பட்டதால் தாம் கவலையும் ஏமாற்றமும் அடைந்த நிலையில் காணப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சிலர் ஆரம்பத்தில் இக் கிராமத்துக்கு வந்து தமது வீடுகளை பார்த்து விட்டு சென்ற போது வீடுகள் இருந்ததாகவும் தற்போது சென்று பார்த்த போது வீடுகள் உடைக்கப்பட்டு மரந்தடிகள் களவாடப்பட்டுள்ளதாகவும் கூறுவதுடன் ஆரம்பத்தில் காணிகளை பார்க்க அனுமதித்த அரச படையினர் தற்போது வெடி பொருட்கள் உள்ளது என்று கூறி அனுமதிக்க மறுக்கின்றனர்.

இது தொடர்பில் அரச அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு தமது மீள்குடியேற்றத்துக்கு வழி செய்யுமாறு இக்கிராம மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-22)

# நிக்கொட் திட்ட நிதியுதவி மூலம் வீடமைப்புத் திட்டம்

(வேலணை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் சில கிராம சேவை அலுவலகர் பிரிவுகளில் 2006 ஆம் ஆண்டு நிக்கொட் திட்டத்தின் நிதி பங்களிப்புடன் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதலாம் கட்ட பணமான 50 ஆயிரம் ரூபாவும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு மீளவும் ஏற்பட்ட போர்ச் சூழலால் இத்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டது. தற்போது மீளவும் இத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த நிக்கொட் நிறுவனத்தினர் முன்வந்துள்ளனர்.

இதன்படி 2ஆம் கட்ட பணமாக 75 ஆயிரம் ரூபா முன்பு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. பரந்தன் கிராம சேவை அலுவலக பிரிவில் 47 பேருக்கும் உமையாள்புரத்தில் 30 பயனாளிகளில், தற்போது மீளக்குடியமர்ந்துள்ள 13 பயனாளிகளுக்கும் கடந்த வியாழக்கிழமை நிக்கொட் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் பயனைப்பெறும் பயனாளிகள் சரியான முறையில் இப்பணத்தை பயன்படுத்தினால்தான் மூன்றாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் அறிவுரை வழங்கியுள்ளனர் என்று பயனாளிகள் தெரிவிக்கின்றனர். (6-22)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கட்டுமலைக் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் ஜுலை மாதம் 10 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (6)

# மக்களின் மொழியூடான அறிவு வளர்ச்சியானது இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை கட்டியெழுப்பும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் மொழியூடானா அறிவு வளர்ச்சியானது இனங்களுக்கிடையில் அன்னியோன்ய புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதுடன் அதன் மூலம் அமைதியான அபிவிருத்தி நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்பவும் முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழ்– சிங்கள எழுத்தாளர் ஒன்றியத்தின் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் எழுத்தாளர்களின் சாகித்திய நூல்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டன.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நூல்களைக் கையேற்று உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான நூல்களின் வரவானது இனங்களுக்கிடையில் நம்பிக்கையையும் நல்லுறவையும் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமாக அமையும் என மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது தமிழ்– சிங்கள மொழி மூலமான 17 நூல்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. (6-4)

# எகிப்து பிரதிநிதிகள் குழு இலங்கை வருகை

எகிப்திய உதவி வெளிவிகார அமைச்சர் அஹம்மத் அமீன் பத்தல்லாஹ் தலைமையிலான உயர்மட்ட குழு ஒன்று உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு வந்தடைந்து.

இலங்கை வந்துள்ள இக்குழு அமைச்சர்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளது.

இதற்கமைய இன்று இக் குழுவினர் வெளிவிகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், மாகாண ஆளுநர் எஸ். அலவி மௌலானா ஆகியோருடனான சந்திப்புக்களை நடத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார். (6)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 1929 | விண்ணில் 2010.05.17

எமது பாடசாலை ஆசிரியர் (நலன்புரிச் சங்கத் தலைவர்) திரு.க.ஸ்ரீச்சந்திரன் அவர்களது பாசமிகு தந்தை

**திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி**
(கோயிற் கடவை, துன்னாலை கிழக்கு)

உங்கள் அன்புப் பார்வையும் அரவணைப்பும் என்றும் எமது நெஞ்சை விட்டகலா. என்றும் உங்கள் நினைவுகளுடன்

நலன்புரிச்சங்கம்
அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள்.

யா/கம்பர்மலை வித்தியாலயம்,
கொம்மந்தனை, வல்வெட்டித்துறை.

(1880)



# Calling for Tender - Teaching Hospital, Jaffna.

***Construction of 9,000 Litre Overhead Water Tank***

01. The Chairman of the Divisional Tender Board,Teaching Hospital, Jaffna will receive sealed tender for construction of 9,000 litre Over head Water Tank,T.H,Jaffna up to 10.00 am on 24.06.2010 Tender form may be collected from Director,TH,Jaffna up to 19.06.2010 on payment on non refundable deposit of Rs.1,500/-

02. Tender will be opened immediately after closing, at the office of the Director,Teaching Hospital, Jaffna.Tenders or their authorized representative are requested to be present at the opening of Tenders.

03. Tender forms are issued only to contractors,who have a valid registration in Grade M7 and above in the field of Building Constractions and other institute of Constructions Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Srilanka (NCCASL).

04. Sealed Tender may be dispatched either by registered post or be directly handed over to Director,Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital,Jaffna on or before 10.00 am on 21.06.2010.

05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office,CECB,Jaffna.

06. For further details please contact Hospital Secretary,T.H., Jaffna.

*The chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

(C-433)

# சாதிக்கத் தவறினார் கிறிஸ்டியானோ றொனால்டோ போர்த்துக்கல்-ஐவரி கோஸ்ட் ஆட்டம் சமனிலை



(போர்ட் எலிசபெத்)

போர்த்துக்கல், ஐவரி கோஸ்ட் அணிகள் மோதிய லீக் போட்டி சமனிலையில் முடிபடைந்தது. அதிகம் எதிர்பார்க்கப்பட்ட போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ சாதிக்கத் தவறினார்.

தென்னாபிரிக்காவில் நடக்கும் உலகக் கோப்பை கால்பந்தாட்டத் தொடரின் நேற்றைய லீக் சுற்றுப் போட்டியில் ஜி பிரிவைச் சேர்ந்த போர்த்துக்கல், ஐவரி கோஸ்ட் அணிகள் மோதின.

**வாய்ப்பு நழுவல்**

போர்த்துக்கலின் நட்சத்திரவீரர் கிறிஸ்டியானோ றொனால்டோவை குறிவைத்து தாக்குதல் நடத்தினர் ஐவரி கோஸ்ட் வீரர்கள். றொனால்ட்டோவின் காலை பதம் பார்த்த ஐவரி கோஸ்ட் வீரர் ஜொகாரா மஞ்சல் அட்டை பெற்றார்.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் 75 அடி தூரத்திலிருந்து றொனால்டோ சுப்பர்ஷொட் அடித்தார். ஆனால் பந்து கோல் கம்பத்தில் பட்டு சென்றதால் வாய்ப்பு நழுவியது.

**மஞ்சள் அட்டை**

ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் ஐவரி கோஸ்ட் வீரர் டெமலுடன் காரசார மோதலில் ஈடுபட்ட றொனால்டோ மஞ்சல் அட்டை பெற்றார். றொனால்டோ மீது எந்த தவறும் இல்லாத போதும் உருகுவே நடுவர் லாரின்டோ தவறுதலாக இந்த முடிபை எடுத்தார். இதனால் றொனால்டோ கடும் அதிருப்தி அடைந்தார். முதல்பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியில் போர்த்துக்கல் அணிக்கு கிடைத்த இரண்டு கோர்னர் கிக் (70,88ஆவது நிமிடம்) வாய்ப்புக்கள் வீணானது. 80ஆவது நிமிடத்தில் பிரிக் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் றொனால்டோ இதை கோலாக்கத் தவறினார்.

இறுதியில் ஆட்டம் கோல் எதுவும் அடிக்கப்பாத நிலையில் சமனிலையானது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.




# பராகுவேயிடம் தப்பியது இத்தாலி ஆட்டம் சமனிலையில் முடிந்தது

(டர்பன்)

பராகுவே, இத்தாலி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடந்த எப் பிரிவு லீக் போட்டியில் நடப்புச்சம்பியன் இத்தாலி அணியும் தென்னமெரிக்க நாடான பராகுவே அணியும் மோதின.

ஆரம்பத்தில் இத்தாலி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினாலும் ஆட்டம் படிப்படியாக பராகுவே அணிவீரர்கள் பக்கம் சாய்ந்தது.

பரபரப்பான ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் இத்தாலி அணியின் செலினி பராகுவே வீரர் வால்டசை முறைக்கு மாறாகத் தடுத்தார்.

இதனால் பவுல் விசில் ஊதிய நடுவர், பராகுவே அணிக்கு சாதகமாக மேலதிக உதை (பிரீகிக்) வாய்ப்பு வழங்கினார்.

வெரா அடித்த பிரீகிக் இத்தாலி பெனால்டிப் பகுதிக்குள் பறந்து வந்தது.

இதனை எதிர்பார்த்துக் காத்திருந்த பராகுவே வீரர் அல்கார்ஸ் பந்தை தலையால் முட்டி கோலாக மாற்றினார்.

இதே பந்துக்கு மேலே எழும்பித் துள்ளிய இத்தாலி அணியின் தலைவர் கன்னவாரா, மற்றும் டிரோசி ஆகியோர் கீழே இறங்கி பார்த்த போது இத்தாலி கோல் கம்ப வலைக்குள்பந்துகிடந்தது. அவ்வளவுவேகமாகசோலாக மாற்றினார் பராகுவே வீரர் அல்கார்ஸ்.

கோல் வாங்கிய இத்தாலி அணி வீரர்கள் பதில் கோல் அடிக்க போராடினார்கள். ஆனால்



முன்னிலை பெற்ற பராகுவே அணியின் தடுப்பாட்டம் அற்புதமாக இருந்தது. இதனால் முதல் பாதியில் இத்தாலி அணி பதில் கோல் அடிக்க வில்லை.

பிற்பாதியில் 46ஆவது நிமிடத்தில் இத்தாலி கோல்காப்பாளர் ஜியான்லுகி பப்பன் மாற்றப்பட்டார். அவருக்குப் பதிலாக மார்சட்டி கடமையாற்றினார்.

ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் பராகுவே வீரர் வேரா அடித்த பந்து போல் கம்பத்துக்கு மேலாக சென்றதால் இத்தாலி அணி இரண்டாவது கோலிலிருந்து தப்பியது.

அடுத்து பத்தாவது நிமிடத்தில் இத்தாலி இரண்டாவது பதில் கோல் திரும்பியது. பெப் அடித்த கோணர் கிக்கை பயன்படுத்தி டி ரோஸி இந்த கோலை அடித்தார்.

இதன் மூலம் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது. இதனால் இத்தாலி அணிக்கு உயிர் வந்தது.

இறுதியில் ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடிபடைந்தது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.




# ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர்

# மலிங்க வேகத்தில் பாக். சுருண்டது; இலங்கை அணி அசத்தல் வெற்றி

(தம்புள்ள)

லசித் மலிங்கவின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் இலங்கை அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதும் ஆசியகிண்ணக்கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடக்கிறது.

இதில் நேற்று தம்புள்ள ரன்கிரிய சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை-பாகிஸ்தான் அணிகள் மோதின. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் தடுமாறியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான உபுல்தரங்க 11, திலகரட்ண டில்சான் 18 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங் கை அணி 8.1 ஓவர்களில் 36 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந் தது.

எனினும் அடுத்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-ஜெயவர்த்தனா ஜோடி இலங்கை அணியை சரிவிலிருந்து மீட்டனர். இந்த ஜோடி 83 ஓட்டங்களை இணைப் பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் குமார் சங்கக்கார 63



பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 42 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சமரவீர களமிறங்க மறுமுனை யில் மஹேல ஜெயவர்த்தன அரைச்சதம் கடந்து நம்பிக்கையளித்தார். எனினும் மஹேல ஜெயவர்த்தனா 64 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மத்யூஸ் களமிறங்க மறுமுனையில் சமரவீர 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கபுகெதர 2 ஓட்டங்களுடனும் மகரூப் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். எனினும் மத்யூஸின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 242 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் ஆட்டமிழக் காமல் 61பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் சொகைப் அக்தர் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 41 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மொகமெட் அமீர் 2 விக்கெட்டுக்களையும் ஆசிப், ரசாக், அப் ரிடி, மலிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 243 ஓட்டங் களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சல்மான் பட் பூச்சியத்துடன் வெளியேறினார். அடுத்து வந்த உமர் அமீன் 7, சொகைப் மலிக் 8, சகாஷாத் ஹசன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்ற பாகிஸ்தான் அணி 13.2 ஓவர்களில் 32 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந் தது.

இந் நிலையில் களமிறங்கிய அணித் தலைவர் சகிட் அப்ரிடி அதிரடியாகத்துடுப் பெடுத்தாடி நம்பிக்கையளித்தார். மறுமுனையில் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய உமர் அக்மல் 30 ஓட்டங்களுடனும் அடுத்து வந்தகம்ரான் அக்மல் 14 ஓட்டங்களுடனும் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.

அடுத்து ரசாக் களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் சகிட் அப்ரிடி 69 பந்தில் தனது 5ஆவது சர்வதேசஒருநாள் போட்டி சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி 40.2 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது. எனினும் அணித்தலைவர் சகிட் அப்ரிடி 76 பந்து களில் (8 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங் கலாக) 109 ஓட்டங்களை குவித்து முரளிதரனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பின்வரிசை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 47 ஓவர்களில் 226 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 26 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதில் அப்துல் ரசாக் ஆட்டமிழக்காமல் 46 பந்துகளில் 2 பவுண்டரிகள் உட்பட 26 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் லசித் மலிங்க 10 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களை கொடுத்து 5 விக் கெட்டுக்களையும் அஞ்சலோ மத்யூஸ் 2 விக் கெட்டுக்களையும் முரளிதரன் 1 விக்கெட்டையும் சாய்த்தனர். இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி 2 புள்ளிகளைப் பெற்றது.

ப்மிலி சுப்பர் ஸ்பொட்
சந்தை அருகாமை, மானிப்பாய்
T.P. 021 5100169
021 7900388
Baira
கோழி இறைச்சி
01 Kg 350/=

பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபா 350/= பெறுமதியான பைப் பை இலவசம்.
(சி-435)

# வன்னி மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் கூட்டமைப்பின் எம்.பிக்கள் பங்கேற்பு

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் வவுனியா, முல்லைத்தீவின் அபிவிருத்தி தொடர்பான முக்கிய உயர்மட்டக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதன்முறையாகக் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டங்கள் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றன.

அந்தந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய றிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுஷைன் பாரூக் போன்றோருடன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய செல்வம் அடைக்காலநாதன், என்.சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் இடம் பெயர்வின்போது முள்ளிவாய்க்கால் போன்ற பிரதேசங்களில் கைவிட்டு வந்துள்ள தமது விவசாய மற்றும் மீன்பிடித் தொழில்களுக்கான உபகரணங்கள், வாகனங்கள், சொத்துக்கள், உடைமைகள் என்பவற்றை மீளப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற தமது கோரிக்கை தொடர்பாக இக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்காலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காணிப் பதிவுகள் இல்லாதவர்களுக்கு காணிக் கச்சேரி நடத்தி அதற்குரிய ஆவணங்களை வழங்கவும் விவசாயம், மீன்பிடி ஆகிய தொழில்களுக்குச் செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் பொதுமக்களை அனுமதிப்பது தொடர்பாகவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மீள்குடியேற்றங்கள் நடைபெற்றுள்ள பல இடங்களில் நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் கிணறுகளைச் சுத்தம் செய்து கொடுப்பதற்கும் இந்தப் பிரதேசங்களில் நிலவுகின்ற சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இத்தகைய கூட்டங்களிலும் அமைச்சர்கள் பங்குபற்றும் கூட்டங்களிலும் தாங்கள் கலந்து கொண்டு தமது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். (ச-5,9)

## கொழும்புப் பேராயர் சபாநாயகர் சந்திப்பு

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கொழும்புப் பேராயர் வண.பிதா மல்கம் ரஞ்சித்துடன் நேற்று நல்லெண்ண சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

பேராயரின் கொழும்பு வாசஸ்தலத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. இருவரும் தேசிய நல்லிணக்கம், சமாதானம் ஆகியன குறித்து பரஸ்பரம் பேசினார்கள்.

அத்துடன் நாட்டின் அபிவிருத்தி, யுத்தத்தின் பின்னரான நிலைப்பாடுகள் என்பன தொடர்பாகவும் ஆராய்ந்தனர். (ச-5)

## புதிய அதிபர் பதவி ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக ஞானகாந்தன் இன்று பதவி ஏற்கின்றார்.

இவரின் பதவியேற்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மற்றும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு

படையினரால் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் 12 ஆயிரம் பேரின் விபரங்களையும் அரசு வெளியிட வேண்டும் என புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் அரசை வலியுறுத்த வேண்டும் எனப் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ்த் தகவல் மையம் அழைப்பு விடுத்துள்ளது.

இக் கோரிக்கையை வலியுறுத்தி அவ் அமைப்பு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் மௌனத்தைக் கலைப்பதற்கு மனித உரிமைகள் அமைப்புகளும் புலம்பெயர் தமிழர்களும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

இவ் இளைஞர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற விபரங்களை வெளியிட அரசு தொடர்ந்து மறுத்து வருகின்றது.

இவ்விதமான தடுப்புக்கள், கைதிகள் மீதான உரிமை மீறல் ஆகும். இதனால் அவர்களின் சார்பில் மன்றில் சட்டத்தரணிகள் ஆஜராகி வாதாடுகின்றமைக்கான சந்தர்ப்பம் இழக்கப்படுகின்றது. குடும்பத்தினர் அவர்களைச் சந்திக்க வழியில்லை என அவ் அமைப்புத் தெரிவித்துள்ளது. (ச-5)

## வீட்டில் இருந்து புறப்பட்ட வயோதிபர் மயங்கிய நிலையில் குளக்கரையில் மீட்பு

### அவரின் தங்க மோதிரம் அபகரிப்பு

(சங்கானை)

வீட்டில் இருந்து புறப்பட்ட வயோதிபர் ஒருவர் அருகில் இருந்த குளக்கரைப் பகுதியில் மயங்கிய நிலையில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மீட்கப்பட்டுள்ளார்.

சங்கானைச் சந்தைப் பகுதியில் சிறு வியாபாரம் செய்து வரும் அதேயிடத்தைச் சேர்ந்த கணபதி கந்தையா (வயது-76) என்பவரே மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப வயோதிபர் தினமும் அருகில் உள்ள கள்ளுத் தவறணைக்குச் சென்று வருவது வழக்கம்.

அதேபோன்றே நேற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு அங்கு சென்ற வயோதிபர் வீடு திரும்பாததனால் உறவினர், நண்பர்களின் வீடுகளில் அவரின் குடும்பத்தினர் தேடியுள்ளனர். ஆனால் அவர் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந் நிலையில் பொதுமக்கள் வழங்கிய தகவலின்படி பிற்பகல் 2 மணியளவில் சங்கானை மண்டிகைக் குளத்தின் கரைப் பகுதியில் மயங்கிய நிலையில் அவர் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரை மீட்ட உறவினர்கள் சங்கானை வைத்தியசாலையில் அனுமதித்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப வயோதிபர் அணிந்திருந்த தங்க மோதிரம் காணாமல் போயுள்ளதுடன் குளக்கரையில் அவர் கொண்டு சென்ற பையினுள் சாராயப் போத்தல்கள் காணப்பட்டதாகவும் அவர் சாராயம் குடிப்பதில்லை எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ச-9)

## பராக்...

ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பு உறவுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகவும் இந்தப் பேச்சுவார்த்தைகள் நல்லிணக்க அடிப்படையில் நடைபெற்றதாகவும் ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

டாப்பூர் யுத்தத்தில் இடம்பெற்ற இன ஒழிப்புத் தொடர்பில் சர்வதேச ரீதியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை சமந்தா பவார் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3,5,9)

## அதிகாரப்...

அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மக்களின் கருத்துக்களைக் கோராது அரசியல் சாசனத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் அனுமதியளிக்காது.

மக்களின் சுதந்திரத்தைப் பாதிக்கும் அரசாங்கத்தின் எந்தவொரு ஜனநாயக விரோத செயலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு அளிக்காது.

தங்களின் அதிகாரப் பசியைத் தீர்ப்பதற்கு முனைப்புக் காட்டுவதனை விடுத்து அரசாங்கம் மக்களின் பசியை ஆற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## தாயும்...

இவர்களது சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## பொதுநலவாய கூட்டத்தில்...

ஜனாதிபதியின் சகோதரரும் நாடாளுமன்ற சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ அங்கீகரித்திருந்தார்.

இந் நிலையில் நாடாளுமன்றம், சரத் பொன்சேகாவை அங்கீகரித்திருந்தாலும் நாட்டின் சட்டத்திற்கு அமையவே இந்த விடயத்தில் நடந்து கொள்ள முடியும் என ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் தடுப்புக் காவலில் உள்ள சரத் பொன்சேகாவை விடுதலை செய்து குறித்த மாநாட்டுக்கு அனுப்ப முடியாது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகின்றது. அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலு கைக்கும் தடங்கலை ஏற்படுத்தும் என ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## வடக்கு மக்களின் பிரச்சினை...

தெரிவித்துள்ளனர்.

இது குறித்துத் தாம் ஜனாதிபதி, இராணுவத் தளபதி, பொலிஸ் மாஅதிபர் என அனைத்துத் தரப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதங்களின் பிரதிகளையும் கிராம மக்கள் ஜே.வி.பியின் தலைவர்களிடம் காண்பித்துள்ளனர்.

இங்கு உரையாற்றிய சோமவன்ச, யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு மக்களை சந்திக்க முடியாதிருந்தது. பல சந்தர்ப்பங்களில் முயன்றபோதும் அது வெற்றியளிக்கவில்லை.

யுத்தம் முடிபடைந்த நிலையில் வடக்கு மக்களைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மக்களின் துயர அனுபவத்தை ஜே.வி.பியினர் கொண்டுள்ளனர். அந்தத் துயரத்தை அறிந்துள்ளோம்.

வட பகுதி மக்களுக்காகத் தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் சோமவன்ச குறிப்பிட்டுள்ளார்.

கல்மடுவுக்கு விஜயம் செய்த ஜே.வி.பியின் குழுவில் அனுரகுமார திஸாநாயக்க, பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகர், மருங்கன் மோகன் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். (ச-5)

## யுத்தக் குற்ற விசாரணை...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

குறித்த ஆணைக்குழுவுக்கான உறுப்பினர் நியமனம் தொடர்பிலும் திருப்தி கொள்ள முடியாது. பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரணங்களை ஏற்றிச் சென்ற கப்பல் மீது இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியிலான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என இலங்கை வலியுறுத்தியுள்ளது.

இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த விசாரணை ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பையும் இலங்கைப் பிரதிநிதி வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் இஸ்ரேல் விவகாரங்கள் சர்வதேச ரீதியான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே தமது உறுதியான நிலைப்பாடு என அல்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

சனல்-4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை என பிலிப்ஸ் அல்ஸ்டன் உறுதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் உருவாக்கப்படவில்லை.

பயங்கரவாதத்திற்கான மூல காரணங்களைக் கண்டறியும் நோக்கிலேயே குறித்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறித்த ஆணைக்குழுவின் பிரதான நோக்கங்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த இணையதளத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலோ அல்லது யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலோ ஒரு வார்த்தையேனும் உள்ளடக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பதன் மூலம் கடந்த காலக் குற்றச் செயல்கள் உதாசீனம் செய்யப்படும் என்பதாக அர்த்தப்படுகிறது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக செயற்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றனவா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
A/L, O/L தேவையில்லை கவலையை விடுங்கள்.

நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்க, தொழில்வாய்ப்புக்களை பெற மேலதிக விபரங்களுக்கு,
MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction, Jaffna.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.